Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-15 | 31-10-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -256

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247



# ஜே.வி.பி யின் குற்றச்சாட்டுக்களினால்

# சனாதிபதி சந்திரிகா கடும் அதிருப்தி

## பொறுப்பற்ற செயல் எனவும் விபரிப்பு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைகுறித்தும் .சனாதிபதியின் செயற்பாடுகள் குறித்தும் ஜே.வி.பி.யினர் தெரிவித்து வரும் குற்றச்சாட்டுகளால் பெரிதும் ஆத்திரமடைந்துள்ள சனாதிபதி சந்திரிகா இதனை ஜே.வி.பி.யின் பொறுப்பற்ற செயல் எனவும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.**

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவங்ச அண்மையில் சனாதிபதி தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் அடங்கிய ஒளிநாடவை சனாதிபதி பார்வையிட்டுள்ளார். இதனை தொடர்ந்து தனக்கு நெருக்கமானவர்களிடம் இந்த விடயம் தொடர்பான தனது கடும் அதிருப்தியை சனாதிபதி வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் பொறுப்பு மிக்க பங்காளிகளாக ஜே.வி.பியினர் நடந்து கொள்ளவில்லை என்று சனாதிபதி கருத்துவெளியிட்டுள்தாகவும் இது தொடர்பில் ஜே.வி.பியினருடன் நேரடியாக பேச சனாதிபதி விருப்பம் கொள்ளவில்லை என்றும் தெரியவந்துள்ளது.


நாடுமுழுவதும் சுற்றுப்பயணம் செய்யும் ஜே.வி.பியினர் பொறுப்பற்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டுவருவதாக சனாதிபதி தெரிவித்துள்ளளார்.

இந்த விடயம் குறித்து கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுசில் பிரேமஜெயந்த ஊடாக நடவ (12ஆம் பக்கம் பார்க்க)

### பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி மருத்துவ சங்க ஏற்பாட்டில் இன்று நடக்கவிருந்த வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான ஒக்டோபர் மாநாடு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. எனவும் மாநாடு பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிநொச்சி மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது.

## விரைவில் பேச்சுவார்த்தைகள் யப்பான் விசேட தூதுவர் நம்பிக்கை



சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக யப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட யசூசி அகாஷி திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு மட்டக்களப்பிற்கு சென்றிருந்தார். மட்டக்களப்பு 23-3ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் 23ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜய குணவர்தனா மற்றும் 23-2ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்சிறீ அமரதுங்க ஆகியோரை சந்தித்து உரையாடிய பின்பு சமாதானக்குழு அலுவலகத்தில் குழு உறுப்பினர்களை சந்தித்து உரையாடினார்.

– வவுணதீவில் புலிகள்–படையினர் சந்திப்பு –

## மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் இரு தரப்பு சந்திப்பு நேற்று வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெற்றது. இலங்கை போர் நிறுத்தக் கண்கானிப்புக் குழுபதில் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் தலைமையில் நடை பெற்ற இச்சந்திப்பில் குழுவின் சார்பில் மாவட்ட கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகசேவைப் பொறுப்பாளர் தயாமோகன் மற்றும் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் மார்சல், படைத்தரப்பில் கலந்துகொண்டோர்



23ஆவது படைப்பரிவு கட்டளை (12ஆம் பக்கம் பார்க்க)

– வவுனியாவில் காணாமற்போன –

## முன்னாள் புளொட் உறுபினர்கள் குறித்து கண்காணிப்புக் குழு-புலிகள் பேச்சு

(செட்டிகுளம்)

வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை அரசியல் துறை காரியாலயத்தில் இடம் பெற்றது. இந்த சந்திப்பில் கடந்த செவ்வாய் கிழமை இனம் தெரியாத நபர்களால் கடத்தி செல்லப்பட்ட புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் தொடர்பாக முக்கியமாகப் பேசப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் தி. ஞானவேல் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

– பரந்தன் குமரபுரத்தில் நடந்த அவலம் –

## பாதுகாப்பற்ற கிணற்றினுள் வீழ்ந்து சிறுவன் பரிதாபகரமாக மரணம்

(கண்டாவளை)

பரந்தன் குமரபுரம் கால்ஏக்கர் திட்டத்தில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவீழ்ந்த 13 வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கிளி.பரந்தன் இந்து மாகாவித்தியாலயத்தில் 07 ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் தர்மலிங்கம் கௌசிப் என்ற சிறுவனே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றுக் காலை 07 மணிக்கு வயலில் நின்ற மாடுகளை வீட்டிற்கு கொண்டுவருவதற்காக சென்ற போது வயலில் வெள்ளத்தால் மூடப்பட்டிருந்த கிணற்றினுள் தவறுதலாக (12ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் கொலை குறித்து சந்தேக நபர் கைதானார்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி உருத்திரபுரம் பத்தாம் வாய்க்கால் பகுதியில் உள்ள கடைச்சல் பட்டறையில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக கிளி.காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இல. மனித உரிமைக் குழுவினர் யாழ்.இல் புலிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பான இந்திய எண்ணங்கள் குறித்து ஆராய்வு

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்தியக் கொளகைகள் குறித்து தற்பொழுது புதுடில்லியில் ஆராயப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கென கூட்டப்பட்ட மாநாட்டில் 40 இற்கும் அதிகமான கல்வி மான்கள், அரசியல் தலைவர்கள், பேச்சாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

நேற்று முழுதும் நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கை இனப் பிரச்சனையின் சகல அம்சங்கள் சர்வதேச ஒத்துழைப்புக்கான வரையறைகள் ஆகியன குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் இது சம்பந்தமான தீர்மானமொன்றை நிறைவேற்ற இந்திய அரசாங்கத்திடம் பரிசீலனைக்காக கையளிக்கவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### வீரச்சாவு

27.06.1997 அன்று திருமலை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்து ள்ளார்.மேஜர்.ஜீவா/திருமாறன் (கிளறன்ஸ் - கிளமென்ற 12/24 மத்தியூஸ் வீதி குருநகர் யாழ்ப்பாணம்) என்னும் போராளியே வீரச்சா வடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

– முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக்குழு –

## உறுப்பினர்கள் மூவர் அமைச்சர்களாக நியமனம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழுவாகக் கருதப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக நேற்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.அமீர் அலி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர், திருகோணமலை மாவட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

# வடகிழக்கு மாகாண ஆளுனரின் யாழ். வருகைக்கு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் எதிர்ப்பு

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுனர் அசோக ஜயவர்த்தனாவின் யாழ். வருகைக்கு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களாகிய எமது உரிமைகள் சிங்களப் பேரினவாதத்தினால் மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட போது அந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக கடந்த இரு தசாப்தங்களுக்கு மேல் போராடி வருகின்றோம். எமது போராட்டம் ஒரு உச்ச நிலைக்கு வந்த பின்னர் இன்று ஒருசமாதானச் சூழ்நிலை உருவாகி சுமார் இரண்டரை வருடங்கள் கடந்து விட்ட நிலையில் தமிழ் மக்கள் சார்பாக எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள எமது பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்ட எந்தவொரு கோரிக்கையையுமே சிறிலங்கா இனவாத அரசு கருத்தில் எடுக்கவில்லை. நாம் கேட்பதெல்லாம் எமது அடிப்படை உரிமைகளையே. எமது அடிப்படை உரிமைகளைத் தர மறுக்கின்ற சிங்கள இனவாத அரசை நாம் வெறுக்கின்றோம். எமது மக்கள் இன்றும் அகதி முகாம்களில் சொல்லெனாத் துயரில் மூழ்கியிருகின்றார்கள் எமது வீடுகள், ஆலயங்கள் பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்களாகவே இருக்கின்றன. இவற்றிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி எமது மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்குமாறு பல தடவை நாம் கோரிக்கையை விடுத்த போதும் அரசு செவி சாய்ப்பதாக இல்லை. அது மட்டுமன்றி எமது பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைவின் அடிப்படையில் அரசு பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கவும் தயாராக இல்லை. மாறாகத் தொடர்ந்து எம்மை அடிமைகளாக வாழ வைக்கவே நினைக்கின்றது. இந் நிலையில் தமிழ் மக்களாகிய நாம் அரசின் பிரதிநிதியாகிய நீங்கள் யாழ் குடாநாட்டிற்கு வருவதை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதை மீறி நீங்கள் குடாநாட்டிற்று வர முற்பட்டால் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நீங்கள் மட்டுமல்ல எமது உரிமைகளை மறுக்கும் அரசின் எந்தப் பிரதிநிதிகளும் எம் மண்ணில் கால் பதிக்க அருகதையற்றவர்களாகவே நாம்கருதுகின்றோம்.

## கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கிளி, புதுக்குடியிருப்பில் கருத்தரங்கு

(அலுவலகச் செய்தியாளர்)

வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒழுங்கு படுத்தலில் கால்நடைவைத்திய அதிகாரிகள், கால்நடை அபிவிருத்தி அலுவலர்கள், பிறிமா கம்பனியின் கால் நடை அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் பங்கு பற்றும் கருத்தரங்கு எதிர்வரும் 05 ஆம் திகதியன்று கிளிநொச்சி வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்திலும், 06 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு சுப்பிரமணியம் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே சகல கோழிவளர்க்கும் பண்ணையாளர்களையும் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## தமிழீழக் காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவின் துவிச்சக்கர வண்டி செலுத்துனர்களுக்கான வேண்டுகோள்

(அலுவலகச் செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையின் வாகனப்போக்குவரத்துப் பிரிவினா துவிச்சக்கரவண்டி செலுத்துனர்களுக்கான வேண்டுகோள்களை விடுத்துள்ளனர். அண்மைக்காலத்தில் “A9” பிரதான வீதியில் ஏற்பட்ட விபத்துக்களில் துவிச்சக்கரவண்டி செலுத்துனர் சிக்குண்டு உயிர் இழப்பு, உடமை இழப்பு என்பன ஏற்பட்டதை அறிவீர்கள்.

இவ் விபத்துக்களில் இருந்து உங்களை காப்பாற்றும் பணியில் நாம் இரவு பகல் என்று பாராது கடமை செய்வதையும் கண்டுள்ளீர்கள். இவ் விபத்துக்கள் நடப்பதற்குக் காரணம்“A9” பிரதான வீதியின் அகலம் குறைவும், இவ் வீதியால் வரும் பல ஆயிரக் கணக்கான வாகனங்களின் வேகமும் ஆகும்.

இவ் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு துவிச்சக்கர வண்டி செலுத்துனர்களாகிய நீங்கள் வீதியின் விதிமுறைகளை கடைப் பிடித்து நடக்க வேண்டும். விதி முறை என கூறும் போது துவிச் சக்கர வண்டி லுெத்தும்போது வீதியின் இடது பக்ககமாக செலுத்தல் வேண்டும். முந்திச் செல்லும் போது வலது பக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும்.

இதேபோன்று இடது பக்கமாக செல்லும் போது தாங்கள் வீதியின் தார் விளிம்பிலிருந்து ஒரு அடிக்குள் துவிச்சக்கர வண்டியை செலுத்துதல் வேண்டும்.

வீதியில் துவிச்சக்கர வண்டியை செலுத்தும்போது இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ பக்கம் பக்கமாக செல்வதைத் தவிர்த்தல்வேண்டும். வீதியில் துவிச்சக்கர வண்டியைச் செலுத்தும் பொழுது ஓடிக்கொண்டிருக்கும் வாகனஙங்களையோ அல்லது இன்னொரு துவிச்சக்கர வண்டியையோ பிடித்துக் கொண்டு செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

நீங்கள் துவிச்சக்கர வண்டியில் கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழையும் போது உங்கள் துவிச்சக்கர வண்டியை கிளை வீதியில் நிறுத்தி பிரதான வீதியில் வலதுபக்கம் இருந்து வரும் வாகனத்தையும் இடதுபக்கமாக இருந்து வரும் வாகனதத்தையும் செல்ல அனுமதித்த பின் துவிச் சக்கர வண்டியை பிரதான வீதிக்குள் இடையூறு இன்றி வீதியின் விதிமுறைக்கேற்ப செலுத்துதல் வேண்டும்.

நீங்கள் பிரதான வீதியிலிருந்து கிளை வீதிக்கோ அல்லது கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும் திசைக்கேற்ப 100 அடிக்கு முன் சைகையை தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டி செலுத்தும் போது முன் பக்கத்தில் வெள்ளை நிற வெளிச்சத்தை யும் பின் பக்கத்தில் சிவப்பு நிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்பு நிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும்.

துவிச்சக்கரவண்டியை செலுத்தும் போது முறையான கட்டுப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். துவிச்சக்கர வண்டி செலுத்தும் போது மது அருந்திவிட்டு செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். எனவும், இவற்றைக் கடைப்பிடித்து துவிச் சக் கர வண்டியைச் செலுத்துமாறு தமிழீழ காவல்த்துறையின் வாகனப் போக்கு வரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (சோ)

–பெண்கள் அ.பு.நிறுவனத்தால் –


## சுய தொழில் முயற்சிக்கடன் அக்கராயன் பகுதியில் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் யு.என்.டி.பி நிறுவன உதவியுடன் அக்கராயன் பகுதியில் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு அக்கராயன் பிரதேச இணைப்பளரின் ஒழுங்குபடுத்தலுடன் பெ.அ.பு நிறுவன இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமானது அவர் தனதுரையில் கடன் திட்ட செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் பகிர்ந்து கொண்டனர். ொதடர்ந்து 11பயனாளிகளுக்கு கால் நடைவளர்ப்பு. தையல், வியாபாரம போன்ற தொழில்களுக்கு 125000/-பெறுமதியான நிதியுதவி வழங்கியதுடன் கிளிநொச்சி பகுதியில் 04 பயனாளிகளுக்கு 75000/-பெறுமதியான நிதியுதவி வழங்கப்பட்டது.






# வீரவணக்கம்



**மேஜர் ஜீவா/திருமாறன்**

**(கிளறன்ஸ்- மேரிகிளமென்ற்)**
**12/24, மத்தியூஸ் வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

*விடுதலைப் பயணத்தில்*
*வேகமாய் நடந்தாய்*
*புலிகளின் குரலுக்குப்*
*புதுவேகம் சேர்த்தாய்!*
*ஜீவா....இன்று நீ*
*விழிமூடிய வீரர்களில் ஒருவனாய்*
*உன் பிரிவு*
*எம் இதயங்களைப் பிளந்தாலும்*
*உறுதி தளராமல்*
*உன்னுடைய சுவடுகளில்....நாம்!*

புலிகளின் குரல் - பொறுப்பாளர்,
போராளிகள்
பணியாளர்கள்

(சி-10595)

9 **தேவைப்படும் தகைமைகளும் சேவை அனுபவங்களும்**

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்**

9.1. சமூகவியல் சமூக விஞ்ஞானம்/புவியியல்/பொருளியல்/வர்த்தகம்/வர்த்தக முகாமைத்துவம் என்பவற்றில் பட்டம் பெற்றிருப்பதோடு சமூகவலுவூட்டல் நடவடிக்கைகளில் 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.2. விவசாயம்/சமூக விஞ்ஞானம்/வணிக அபிவிருத்தி என்பவற்றில் டிப்ளோமா பெற்றிருப்பதுடன் சமூக வலுவூட்டல் நடவடிக்கைகளில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

9.3. புவியியல்/கணக்கியல்/வர்த்தகம்/பொருளாதாரம்/வணிகக்கற்கை நெறிகள் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்று உள்ளிட்ட க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் சமூக வலுவூட்டல் நடவடிக்கைகளில் 08 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

9.4 ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவராக இருப்பதோடு தமிழ்/சிங்களம் ஆகிய மொழிகளில் அல்லது இரு மொழிகளிலும் சமூகத்துடன் தொடர்பு கொள்ளக் கூடியவராக இருப்பது மேலதிக தகைமைகளாகக் கணிக்கப்படும்.

9.5. நியாப் திட்டத்தில் நான்கு வருடங்கள் சமூக வலுவூட்டாளராக திருப்தியான சேவை செய்தவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**கே.கணேஸ்**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,**
**வவுனியா மாவட்டம்.**

(சி10594)

# செப்டெம்பர் தாக்குதலை நடத்தியது நாங்களே அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவோம்

## -பின்லேடன் பகிரங்க எச்சரிக்கை-

(வோஷிங்டன்)

**அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என்று தீவிரவாதி பின்லேடன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அமெரிக்க தேர்தல் நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்கா முழுவதும் பீதி கிளம்பியுள்ளது. இதைத் தொடர்ந்து பலத்த பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.**

கடந்த 2001 ஆம் ஆண்டு செப் டெம்பர் மாதம் 11 ஆம் திகதி சர்வதேச தீவிரவாதி பின்லேடனின் அல்-ஹைய்தா இயக்கத்தினர் விமானங்களைக் கடத்தி நியூ யோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையம் மற்றும் இராணுவத் தலை மையகமான பென்டகன் உட்பட பல பகுதிகள் மீது தாக்குதல் நடத் தினார்கள். இந்த நிலையில் பின் லேடன் அடிக்கடி அரபுநாட்டின் அல்ஜசீரா தொலைக்காட்சியில் அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுத்து வந்தார். இப்போது அல்ஜசீரா தொலைக்காட்சியில் தோன்றி பின்லேடன் மீண்டும் அமெரிக்கா வுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

அதில் உலகவர்த்தகமையம் மீது தாக்குதல் நடத்தியது அல்-ஹைதா இயக்கம் தான் என்று முதல் தடவையாக ஒப்புக் கொண் டுள்ளார். தொலைபேசியில் பின்லே டன் கூறியிருப்பதாவது.

அமெரிக்க நகரங்கள் மீது தாக் குதல் நடத்தியது எங்கள் இயக்கம் தான். அமெரிக்காவின் பிடியில் இருந்து முஸ்லிம் நாடுகளை விடு விப்பதற்காகத் தான் அந்தத் தாக் குதலை நடத்த நான் உத்தர விட்டேன். முஸ்லிம்களை அமெ ரிக்கா அச்சுறுத்தி வருகிறது. அமெ ரிக்கா தனதுமுடிவை மாற்றிக் கொள்ளவேண்டும். அமெரிக்க மக்களைக் காப்பாற்றும் பொறுப் பும் சக்தியும் அமெரிக்க அதிபரி டம் இல்லை. அமெரிக்க மக்களிடம் தான் இருக்கிறது. அமெரிக்கா மீது மீண்டும் தாக்கு தல் நடத்துவோம் இதற்குக் கார ணம் அமெரிக்கா தான்.தங்களைக்காப்பாற்றிக் கொள் வதுஅமெரிக்கர்கள் கையில் தான் இருக்கிறது. இவ்வாறு பின்லேடன் கூறியுள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தல் வருகிற 2 ஆம் திகதி நடக்கிறது. இந்த சூழ்நிலையில் பின்லேடன் மிரட்டல் விடுத்து இருப்பதால் தேர்தல் நேரத்தில் அல்-ஹைதா இயக்கத்தினர் தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டி யிருப்பதாக அமெரிக்கா முழு வதும் பெரும்பரபரப்பு ஏற்பட் டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெ ரிக்கா முழுவதும் பலத்த பாது காப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

### ஈரானின் அனுத்திட்டத்தை இஸ்ரேல் தாக்காது

ஈரானின் அணுத்திட்டம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் சாத்தியக்கூற்றை அமெரிக்க வெளி யுறவு அமைச்சர் கொலின் பவல் நிராகரித்துள்ளார். இஸ்ரேல் உட்பட முழு உலகமும் இந்த விடயத்தை சாதகமான முறையில் தீர்த்துக் கொள்ளவே விரும்பு வதாக பவல் தெரிவித்துள்ளார்.



குடியரசுக் கட்சியின் பதில் சனாதிபதி வேட்பாளர் ஜோன் எட்வேட் "ருனைந்சோ" என்ற கட்சியிலிருந்து திரும்பும்போது பார்வையாளர்களிற்கு கையசைக்கின்றார்.

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினராக பதவி வகித்தால் குடும்பத்துடன் கொலை செய்யப்படுவர்

## அபு.முஸாப்-அல்-ஸர்ஹார் எச்சரிக்கை

ஈராக்கில் அல்ஹைதா இயக்கத் தின் நட்பு அமைப்பான அபு முஸாப்-அல்-ஸர்ஹார் இயக் கத்தின் தலைமையிலான பழைய பெயர் ஒன்றைப் பயன்படுத்தும் தீவிரவாதிகள் சிலர் ஈராக்கிய தேர் தல் ஆணையகத்திற்கு அச்சு றுத்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

பாக்தாத்திலும் வடபகுதி நகரான மொசூலிலும் உள்ள ஆணைக் குழு அலுவலகங்களிற்கே இவ் வாறு கடிதங்கள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் தேர்தல் ஆணைக்குழு உறுப் பினர்கள் தொடர்ந்தும் தங்கள் பதவிகளை வகித்தால் அவர்கள் குடும்பத்தினருடன்சேர்த்துகொலை செய்யப்படுவார்கள் என்றும் அக் கடிதத்தில் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சனவரி மாதத்தில் ஈராக்கின் தேசிய பேரவைத் தேர் தல்களை நடத்துவதற்கு ஆணைக் குழு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானுடனான தொடர்பை துண்டிக்காவிட்டால் வெளிநாட்டவர் மூவரும் சிரச்சேதம் செய்யப்படுவர்

## தீவிரவாதிகள் குழு எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் மூன்று வெளிநாட்டவர்களைத் தாங்களே கடத்திச் சென்றதாகக் கூறிவரும் தீவிரவாதிகள் குழுவொன்று இந்த வெளிநாட்டவர்களின் அரசாங்கங் கள் ஆப்கானிஸ்தானுடன் கொண் டுள்ள தொடர்புகளை துண்டித் துக்கொள்ளாவிட்டால் கடத்தப் பட்டவர்கள் கொல்லப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது. கடத்தப் பட்டவர்கள் சிரச்சேதம் செய்து கொல்லப்படுவது மாத்திரமின்றி ஈராக்கில் இடம் பெற்றது போன்று அவர்களது சடலங்கள் துண்டு துண்டாக வெட்டப்படும் என்று தலிபான் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற குழுவின் பேச்சாளர் முல்லா கிஷாக் மன்சூர் தெரிவித்துள்ளார்.

அயர்லாந்து பிரஜாவுரிமை யினையும் பிரிட்டிஸ் பிரஜாவுரிமை யையும் கொண்டுள்ள பெண் ஒருவரும் கொசோவாவைச் சேர்ந்த பெண் ஒருவரும் பிலிப் பைன்ஸ் இராஜதந்திரி ஒருவருமே இவ்வாறு கடத்தப்பட்டவர்கள்.

ஆப்கானிஸ்தானில் அண்மை யில் நடைபெற்ற முதலாவது நேரடி சனாதிபதித் தேர்தலின் போது உதவிப் பணிகளை மேற்கொண்டு வந்த 3பேரும் ஐக்கிய நாடுகள் ஸ்தாப னத்தின் வாகனமொன்றில் பிரயா ணம் செய்து கொண்டிருந்த போது கடந்த வியாழக்கிழமை கடத்தப்பட்டுள்ளனர்.

### பழிவாங்கப்படும்

தாய்லாந்தில் இராணுவ ட்ரக்கில் மூச்சுத் திணறலில் 78 பேர் பலியானதற்கு பழிவாங்கப் படும் என முஸ்லிம் போராளிகள் சூளுரைத்துள்ளனர். கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களே இவ்வாறு பலியானதாகக் குறிப் பிடத்தக்கது. அல்லாவின் மீது ஆணை யாக எமக்கு அநீதி இழைத்தவர் கள் நிம்மதியாக உறங்க முடியா தெனவும் இவ் அமைப்பு கூறியுள் ளது.

# யசீர் அரபாத் இறக்கவேண்டும் 47 சத வீத இஸ்ரேலியர்களின் விருப்பம்

## -தொலைக்காட்சிக் கருத்துக்கணிப்பு தெரிவிப்பு

(ஜெருசலேம்)

இரத்தக்கோளாறு நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக பிரான்ஸ் நாட்டுக்குச் செல்லும் பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத் இறந்து போக வேண்டும் என்று 47 வீதம் இஸ்ரேலியர் விரும்புகின்றனர் என்று ஒரு கருத்துக் கணிப்பு கூறு கிறது.

இஸ்ரேலைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சி இக் கருத்துக் கணிப்பை நடத்தியது. 500 பேரிடம் இக் கருத்துக் கணிப்பு நடத்தப் பட்டது.

அதில் 47 சதவீதம் பேர், சிகிச் சைக்குச் செல்லும் அராபத் இறக்க வேண்டும் என்று கூறியிருக்கின் றனர். 32 சதவீதம் பேர் அவர் இறக்க கூடாது என்று கூறியிருக் கின்றனர். மீதிப்பேர் கருத்து எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை..

அராபத்துக்கு ஏற்பட்டு இருப் பது மிகவும் தீவிரமான ரத்தக் கோளாறு நோய் .அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவில்லையெனில் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள் ளது. அச் சிகிச்சையை வெளிநாட் டில் தான் பெற முடியும். இதை அறிந்து இஸ்ரேல்பிரதமர் அரியல் ஷரோன், அவர்வெளிநாடு செல்ல அனுமதிக்க முடிவு செய்தார்.

அவ்வாறு சிகிச்சைக்காக அர பாத்தை வெளிநாடு செல்ல ஷரோன் அனுமதித்தது சரிதானா என்ற கேள்விக்கு "சரிதான்" என்று 58 சதவீதம் பேர் கருத்து தெரி வித்துள்ளனர். 36 சதவீதம் பேர் அது தவறு என்று கூறியிருக்கின்ற னர்.

பாலஸ்தீனத்தில் உள்ள ரமல் லாவில் இருந்து வெளியே செல்ல அராபத்தை கடந்த 3 ஆண்டுகளாக இஸ்ரேல் அரசு அனுமதிக்க வில்லை. நோய்க்கு சிகிச்சை பெறு வதற்காக வெளிநாடு செல்ல இப் போது அவரை இஸ்ரேல் அரசு அனுமதித்துள்ளது.

# மாணவிகள் தங்கும் விடுதியில் கலவரம் விரிவுரையாளர்கள் உட்பட 200 பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேஷின் டாக்கா நகரி லிருந்து 250 கிலோமீற்றர் தூரத் திலுள்ள "ராஜ்ஜாகே" பல்கலைக் கழகத்தின் மாணவிகள் தங்கும் விடுதிப் பகுதிக்குள் நேற்று முன் தினமிரவு இடம் பெற்ற கலவரத் தின் போது 200 மாணவர்களும் விரிவுரையாளர்களும் காயமடைந் துள்ளனர்.

இதனையடுத்து அதிகாரிகள் பல்கலைக்கழகத்தை காலவரை யற்று மூடியுள்ளனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் மாணவிகள் தங்கும் விடுதிக்குள் 3 பேர் ஊடுருவியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திய மாண வர்களைக் கலைப்பதற்காக அதிகா ரிகள் பொலிசாரை வரவழைத்த தையடுத்து கலவரங்கள் ஆரம்ப மாகின. இதன் போது அனேக மாணவர்கள் அங்கிருந்து வெளி யேறாததால் பதட்டம் நிலவுவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப் பதற்காக பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் இறப்பர் துப்பாக்கி ரவைகளையும் ஏவிய தாகவும் இதன் போது ஆத்திர மடைந்த மாணவர்கள் பொலிசார் மீது கற்களையும் செங்கற்களை யும் வீசியுள்ளனர். இதன் கார ணமாக பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள்ளும் அருகிலிருந்த வாகனங்களும் சேதமடைந்துள்ளன.




கடத்திச் செல்லப்பட்ட ஜப்பானிய சொசிகொடா வின் சடலம் ஈராக்கிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்ற பத்திரிகைச் செய்தியை வாசிக்கும் யப்பானியர்கள்.

# சிரியா காடுகளில் திடீர் தீ ஏராளமான வீடுகள் நாசம்

சிரியாவில் துருக்கி நாட் டையொட்டிய எல்லையில் செயற் கையான காட்டுப்பகுதி உள்ளது. இந்தக் காட்டுப்பகுதியில் கடந்த 3 நாட்களாக தீபரவி வருகிறது. அந்தப் பகுதியில் மரத்தினாலான வீடுகளும் ஏராளம் உள்ளன.

இந்த வீடுகளும் தீயில் கருகி சாம்பலாகி விட்டன. தீணை அணைக்க நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் போராடி வரு கிறார்கள். ஆனாலும் பலத்த காற்று வீசி வருவதால் தீயை அணைக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழீழ மாவீரர் நாளை சிறப்புற கடைப்பிடிக்க மன்னாரில் ஏற்பாடு

(மன்னார்)

**தமிழீழ மாவீரர் நாளை சிறப்பாகக் கடைப்பிடிக்கும் ஏற்பாடுகள் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்று முன்தினமும் மாவட்ட மட்ட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.**

மன்னார் வட்டக்கண்டல் அரசியல்துறை அலுவலகத்தில் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.இனியவன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மாவீரர்நாள் ஏற்பாடுகள் குறித்து குறிப்பாக ஆராயப்பட்டது.

இதற்கு சகல பிரதேச மட்டத்தில் உள்ளவர்களும், தேசிய எழுச்சிப் பேரவையினைச் சேர்ந்த பிரதிநிதிகளும் சங்கங்களின் பிரதிநிதிகளும் மற்றும் போக்குவரத்துச் சங்கம், வர்த்தகசங்கம், ஓட்டோ உரிமையாளர் சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டு மாவீரர் நாளிற்குரிய ஒழுங்குகள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டது. (மி)

# கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்பட்ட மாணவர் விபரங்களை உடன்பதிவு செய்க!

## தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலர் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 1996 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய மாணவர்களுக்கு வழங்கப் பெற்றுவந்த கொடுப்பனவுகளை இடைநிறுத்தியுள்ளமை தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்பொருட்டு 1996 ஆம் ஆண்டு மேற்படி பரீட்சையில் சித்தியெய்தி புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்று இடைநிறுத்தப்பெற்றுள்ள கிளி முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரையும் தங்களது முழு விபரங்களையும் அந்தந்த பாடசாலை அதிபர்கள் ஊடாக கிளி/ முல்லை மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க செயலர்களிடம் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு கிளிமாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க செயலர் பங்கயற்செல்வன் வேண்டியுள்ளார். (சோ)

# மீன்பிடி வலை திருடியவர் காவல்துறையால் கைது!

முல்லைத்தீவு செல்வபுரத்தில் வலை திருடிய ஒருவர் முல்லைத்தீவு காவல் பணிமனையினரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது; செல்வபுரத்தில் வட்டுவாகல் நபர் ஒருவரின் வாடியை உடைத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வலையினைத் திருடி ஒருதொகுதியை விற்பனை செய்துள்ளார் எனவும் முல்லைக் காவல்ப்பணிமனையினரின் கடுமையான தேடுதல் நட[illegible]டிக்கையினால் குறிப்பிட்ட நபர் கைது செய்யப்பட்டு மேல்விசார[illegible]ணக்காக முல்லைமாவட்ட நீதிமன்றில் முல்லைக் காவல் பணிமனையினரால் முற்படுத்தப்பட்டார். (20)

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை வீதியில் அதிகரிப்பு

(விசுவமடு)

கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை வீதிகளிலும் அதிகரித்துள்ளது. பரந்தன் முல்லைத்தீவு பிரதானசாலையில் விசுவமடுவிற்கும்-வெலிக்கண்டல் சந்திக்குமிடையில் வீதிகளில் இரவுவேளைகளில் வளர்ப்பு ஆடுகள், மாடுகள், நாய்கள் என [illegible] படுத்திருப்பதால் இரவு வேளைகளில் மிதிவண்டிகளில், உந்துருளிகளில் பயணிக்கும் பயணிகள் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்கவேண்டிய நிலையுண்டாவதுடன் பலர் வீதியில படுத்திருக்கும் கால்நடைகளுடன் இரவில் மோதுண்டு செய்வதறியாது யாரின் உதவியுமின்றி காயங்களுடன் செல்வதையும் காணமுடிகிறது. (10)

# நாட்டுப்பற்றாளர் கந்தசாமியின் 3 ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு

(கண்டாவளை)

தருமபுரத்தைச் சேர்ந்த நாட்டுப்பற்றாளர் கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளி.தருமபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் பி.ப 4.00 மணியளவில் கந்தசாமி நினைவு செயற்பாட்டுக் குழு தலைவர் ப.கணேசன் தலைமையில் நண்டபெற்றது.

தமிழீழத் தேசியக்கொடியை மாவீரர் கலைச்சாமியின் தந்தை மகாலிங்கம் ஏற்றிவைத்தார், திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரை அதிபர் திருமதி சி.வேல்முருகு ஏற்றினார். மலர் மாலையை நாட்டுப்பற்றாளர் கந்தசாமியின் சகோதரன் அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை பாடசாலை உப அதிபர் செல்வி. ந.முருகேசு, கிராம அ.ச.தலைவர் இ.ஞானசிங்கம், சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெளிக்கள உத்தியோகத்தர் பஞ்சலிங்கம், விசுவமடுப் பிரதேச தே.எ. பேரவை செயலாளர். வ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். அடுத்து 2004 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில்“பாவோதல்” நிகழ்ச்சியில் கிளி.தருமபுரம் இல.1அ.த.க. பாடசாலை மாணவர்கள் சூரிய பிரகாஸ், கோபிகிருஸ்ணா ஆகியோர் 3 ஆம் இடத்தை பெற்றமைக்காக நாட்டுப்பற்றாளர் கந்தசாமி நினைவாக உதவிப்பணம் வழங்கப்பட்டது. (14)

# நூல் வெளியீடு


(அலுவலகசெய்தியாளர்)

புலிகளின்குரலின் காற்றின் துளிகள் வெள்ளிப்பொழுது படைப்புக்களின் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.எதிர்வரும் 3ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# “இது எங்கள் தேசம்” நூல் வெளியீட்டில் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசியக் கல்வி நிறுவகப் பணிப்பாளர் தலைமையில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் ச.முருகானந்தனின் “இது எங்கள் தேசம்” சிறுகதைத் தொகுதி நூல் வெளியிட்டு வைக்கப்பெற்றது. இவ் விழாவில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இவர் கடந்த 40 ஆண்டுகளாக மல்லிகை சஞ்சிகையினை வெளியிட்டு வருவதையொட்டி இந் நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# வர்த்தகர் சங்கக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் தொழிற்சங்கங்களின் அனுசரணையுடன் மன்னார் வர்த்தக சங்கத்தின் கூட்டம் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு மேற்படி நிலையத்தின் தலைவர் சற்குணராஜா தலைமை தாங்கினார். மன்னார் நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் முடியரசன். நிலையத்தின் பொறுப்பாளர் உட்பட பலர் சிறப்புரைகளை ஆற்றினர். இதன் போது மன்னார்நகரப் பொறுப்பாளர் சமகால நிகழ்வுகள் பற்றி எடுத்துரைத்தார். அதனையடுத்து வர்த்தக சங்கத்தின் நிர்வாக கட்டமைப்பின் தெரிவுகளான தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் தெரிவுகளும் இடம்பெற்றன. அத்துடன் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் இனி வரும் காலங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் மன்னாரில் கடைகள் பூட்டப்பட வேண்டுமெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (மி)

# முன்பள்ளி கட்டடப் பணிகள் இடைநிறுத்தம் சிறார்களின் கற்றல் செயற்பாடு பாதிப்பு

(முல்லை)

உடையார்கட்டு வடக்கு கலை மகள் முன்பள்ளிக்கான கட்டடம் அமைக்கப்படாது இடைநிறுத் தப்பட்டுள்ளது. இதனால் இம் முன் பள்ளியில் கல்வி கற்கும் மாணவர் களின் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு 7ஆம் மாதம் அன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதுவரை 8 தூண்கள் மட்டுமே எழுப்பப்பட்ட நிலையில் தொடர்ந்து காணப்படுகின்றது.

63 மாணவர்கள் இம் முன் பள்ளியில் கல்வி கற்கின்றனர்.

தற்போது இந்த முன்பள்ளி தற்காலிக கொட்டகையில் இயங்குகின்றது. அதனுள் கறையான் புற்றுக்கள் காணப்படுகின்றன இதனால் இம்முன்பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர் பயன்படுகின்றனர். இம் முன்பள்ளி கட்டுவதற்கு காணி கூட பெற்றோர்களின் நிதியினால் வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (20)

# தேசிய எழுச்சிப் பேரவை மாதாந்த சங்கமம்

புதுக்குடியிருப்புப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர்களுக்கான மாதாந்த சங்கம நிகழ்வு கடந்த வியாழனன்று அப்பகுதி தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் கனகசுந்தரசாமி தலைமையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் பொதுச்சுடரை கிருஷ்ணன்கோவில் குருக்கள் இராமசாமி ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியை புது/முள்ளியவளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாழன் ஏற்றி வைத்தார்.லெப்.சங்கரின் திருவுருவப்படத்திற்கான சுடரை முல்லை. மாவட்ட அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்ற, திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை முல்லை .மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி அணிவித்தார்.தொடர்ந்து நிகழ்விற்கான ஆசியுரையை இராமசாமி குருக்கள் வழங்க தலைமையுரையுடன் தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர்களின் கருத்துக்கள் அறியப்பட நிகழ்வு இடம் பெற்றது.

கருத்துரையில் எதிர்வரும் மாவீரர் தினநிகழ்வு உட்பட பல் வேறுபட்ட நடைமுறை விடயங்கள் தொடர்பாக புது/ பிரதேசசெயலர், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், புதுக்குடியிருப்பு காவல்பணிமனைப் பொறுப்பாளர், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

சங்கம நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் போராளிகள், காவல்துறையினர், தேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், கிராமஅலுவலர், பல்துறை பிரதிநிதிகளென கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விதைநெல் உற்பத்தியை மேம்படுத்த குமுழமுனை விவசாயிகளுக்கு உதவி

(முல்லை)

முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் குமுழமுனைக் கிராமங்களுக்கு விவசாய உள்ளீடுகள் மானியமாக வழங்கப்பட்டது.

கடந்த 19.10.2004 குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் வைத்தே இவ் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

முல்லை மாவட்டத்தில் 625 விவசாயிகளுக்கு இவை வழங்கப்பட்டன. அதில் குமுழமுனையில் 115 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

குமுழமுனை விவசாயிகளின் விதை நெல் உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாகவே இவ்விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

குமுழமுனை விவசாயப் போதனாசிரியர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் கருத்துரைகளை குமுழமுனைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் குமுழமுனைக்கிராம அலுவலர் தெய்வேந்திரன் ஆகியோர் நிகழ்த்த திட்டம் தொடர்பான விளக்கத்தினை விவசாயப் போதனாசிரியர் சிவபாதம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பாடத்திட்ட உத்தியோகத்தர் யோகேஸ்வரன், விவசாயத்திணைக்களத்தினர், கமநல சேவைத் திணைக்களத்தினர், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (20)

# பூநகரி வெற்றிச்சமர் நடவடிக்கையின் 11ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்

## நாளை பூநகரி ம.வி.யில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

பூநகரி-நாகதேவன் துறை கூட்டுப் படைத்தள அழிப்பின் 11ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் சிறப்பாக நடாத்தப் படவுள்ளன.தமிழீழ விடுதலைப்புலிகளால் பூநகரி -நாகதேவன் துறை ஞானிமடம் கூட்டுப் படைத் தளம் 'ஒபரேசன் தவளை' நடவடிக்கை மூலம் 13/11/1993இல் அழிக்கப்பட்டது. இந் நடவடிக்கையில் முதன் முதலாக பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் யுத்தடாங்கிகள், 6 நீரூந்து விசைப்படகுகள் என்பனவும் முதன் முதலில் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே இந் நிகழ்வை நினைவு கூரும் முகமாக எதிர்வரும் 13/11/2004 இல் 11ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளது.இந் நிகழ்வுகள் சம்பந தமான ஒருங்கமைப்புக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு கிளி/பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.(15)

# சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக சுயதொழில் முயற்சிக் கடன்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தித் திட்டத்தின்கீழ் சாவகச்சேரி பிரதேச வாழ் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சிக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.அந்தவகையில் இப்பிரதேசவாழ் 21சுயதொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக தலா 5 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டிருக் கிறது.

அத்துடன் இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுய தொழில் முயற்சியாளர்களில் மேலும் 11பேருக்கு தலா 5ஆயிரம் ரூபா கடனுத வியும், 17பேருக்கு தலா 10ஆயிரம் ரூபா கடனுதவியும் வழங்கப்படவுள்ளன.இப்பிரதேச மக்களின் பொருளாதார மேம்பாட்டை இலக்காகக் கொண்டே இக்கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

# ரூ.25,000 மீள்குடியமர்வுக் கொடுப்பனவு முல்லை.மாவட்டத்தில் வழங்க நடவடிக்கை

## -ஒரு தொகுதி நிதி கையளிப்பு

(முல்லை)

**முல்லை. மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இதுவரை ரூபா 25ஆயிரம் பெறாதவர்களுக்கு வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக முல்லை. மாவட்ட நிகொட் திட்டக்கணக்காளர் கே.எம். இராஜேந்திரம் தெரிவித்தார்.**

கடந்த 15.10.2004 அன்று முல்லை.மாவட்ட நிகொட் அமைப்பிற்கு ரூபா.10 மில்லியன் தரப்பட்டது. அது வங்கியில் இடப்பட்டு இதுவரை ரூபா 25ஆயிரம்பெற்றுக் கொள்ளாத 5 பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்கள் பெற்றுக் கொள்வ தற்கான கடிதங்களும் 28.10.2004 மக்களுக்கு அனுப்பப்பட்டதென்றும்.

இதில் கரைதுறைப்பற்றில் 52 குடும்பங்களுக்கும் ஒட்டுசுட்டானில் 97குடும்பங்களுக்கும், புதுக்குடியிருப்பில் 160 குடும்பங்களுக்கும், துணுக்காயில் 78 குடும்பங்களுக்கும், மாந்தை கிழக்கில் 13 குடும்பங்களுக்கு முல்லை.மாவட்டத்தில் 400 குடும்பங்களுக்குமாக முதல் கட்டமாக வழங்கப்படுகின்றது.

இதேபோன்று 27.10.2004 12 மில்லியன்ரூபா நிகொட் அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் இரு பிரதேச செயலர் பிரிவுகளில் மட்டுமே 2ஆம் கட்டமாக வழங்கப் படவுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 446 குடும்பங்களுக்கும், துணுக்காய் பிரதேசத்தில் இரு குடும்பங்களுக்குமாக மொத்தம் 448 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 9ஆம் மாதம் 10 மில்லியன் கிடைக்கப்பெற்று கரைதுறைப்பற்றில் 157குடும்பங்களுக்கும், ஒட்டுசுட்டானில் 81 குடும்பங்களுக்கும் துணுக் காய்ப்பிரதேசத்தில் 138 குடும்பங்களுக் கும், மாந்தை கிழக்கில் 24 குடும்பங்களுக்கும் மொத்தம் 400 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது கடந்த மே மாதத்திற்கு பிற்பாடு செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில மொததம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ரூபா 32 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# ஆறுமுக நாவலர் நினைவு பேச்சு,கட்டுரைப் போட்டிகள்

யாழ்.சைவபரிபாலன சபையால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 125ஆவது குருபூசைத் தினத்தின் சார்பாக நடத்தப்படும் பேச்சுப்போட்டி விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் இன்றாகும். 14.11.2004 ஞாயிறு மு.ப.9.00மணிக்கு வண்.். நாவலர் மகாவித்தியாலயததில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கீழ்ப்பிரிவுப் பேச்சுப்போட்டி (தரம் 6,7,8) விடயம்:- "நாவலரைப் போல் நமக்காளில்லை", நேரம் :-5 நிமிடம்.

மத்தியபிரிவு (தரம் 9,10,11), நேரம் :-7 நிமிடம், விடயம்:- "நாவலரும் தமிழகமும்"

மேற்பிரிவு (தரம் 12,13), நேரம்:- 10 நிமிடம், விடயம்:- "நாவலர் நூலாசிரியர் பதிப்பாசிரியர்"

கட்டுரைப்போட்டி பங்குபற்றும் தரம் :-(12,13), நேரம்:- 1 மணித்தியாலம், விடயம்:- நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்புள்ள தலைப்புப் போட்டி நாளான 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9மணி, வண்/நாவலர் மகாவித்தியாலயத்தில் வழங்கப்படும்.

குறிப்பிட்ட பிரிவுகளில் முன்பு பங்குபற்றி பரிசு பெற்றவர்கள் இவ்வருடம் கலந்துகொள்ள முடியாது. வெற்றிபெற்றோருக்கு 04.12.2004இல் பரிசு வழங்கப்படும். ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கு ஒருவரே தோற்றலாம் என கௌரவ தேர்வுச்செயலர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

# நேர்முகத் தேர்வு

(முல்லை)

முல்லை மாவட்ட அரச அதிபரினால் கோரப்பட்ட புள்ளி விபரக்கிளைகளுக்கான எழுதுனர்களுக்கான நேர் முகத் தேர்வு எதிர்வரும் 1ஆம்,2ஆம் திகதிகளில் முல்லை மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அரச அதிபர் செயலக நிர்வாக அலுவலர் இ.இரத்தினராஜா தெரிவித்தார்.


இதற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# வட்டக்கச்சி ம.விக்கு கணினி அன்பளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு பாடசாலை பழைய மாணவன் சிவகுரு விஸ்ணுகோபராஜா தலைமையில் இடம் பெற்றது.

மற்றும் மின்பிறப்பாக்கி ஒன்றினை கடந்த மாதம் பழைய மாணவனான சிறிரங்கன் அன்பளிப்பாக



கணினியினை பழைய மாணவனின் தந்தை சிவகுரு பாடசாலை அதிபரிடம் அன்பளிப்பாக வழங்குவதை படத்தில் காணலாம் (12)

னால் நேற்று முன்தினம் கணினியொன்று அன்பளிப்பாக வழங்கப் பட்டது.

இந்நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சி.சந்திர வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இப் பாடசாலைக்கு இன்னும் பல கணினிகள் பழைய மாணவர்களால் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (12)

# சமாதானத்தின் கருப் பொருளை வலியுறுத்தி மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

## குடா நாட்டில் ந டாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை சமாதானத்தை வலியுறுத்தி பாடசாலை மாணவர்களிற்கிடையே கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவிய, பேச்சுப் போட்டிகளை யாழ். குடாநாட்டில் நடாத்த முன் வந்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு இன்று எதிர்நோக்கும் பாரிய சவால் சமாதானத்தை முன் நகர்த்திக் கொண்டு செல்வதாகவே உள்ளது. இன்று காலாகாலமாக இருந்து வந்த பிரச்சினை ஓய்ந்து இருக்கின்றது. முன்னைய அரசால் தொடரப்பட்ட சமாதானப்பேச்சு வார்த்தைகள் இடைநடுவில் நிற்க, தற்போது பதவியில் இருக்கும் அரசும் சமாதானத் தீர்வை இழுத்தடிப்பது போலவும் கொண்டு நகர்த்துவதில் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டவண்ணமுள்ளது. இந்நிலையில் சமாதானத்தை வலியுறுத்தி ஆக்கபூர்வமான செயற் திட்டங்களைச் செய்யவேண்டிய தேவையும் கடப்பாடும் எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஓர் அரசைஅமைக்கும் மக்கள் மத்தியில் சக்தி மிக்க சமுதாயமாக இருக்கும் மாணவரிடையே எம் அமைப்பின் ஊடாக நாம் எதிர்பார்க்கும் சமாதானத்தின் கருப்பொருளின [illegible] ா கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம், பேச்சு என்ட [illegible] ற்றினூடான ஒரு தேடலாக உண்மையான சமாதா [illegible] த்தின் தேவையை விதைப்போமாகில் அது சமாதானத்திற்கு சிறந்ததோர் அத்திவாரமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆகவே தங்கள் பாடசாலையிலிருந்து பங்கு பற்ற விரும்பும் மாணவர்களது பெயர் விபரங்களையும் அவர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினையும் எமக்குக் கிடைக்குமாறு 10.11.2004 இற்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அனைத்து யாழ்.மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

போட்டிகளானது கீழ்ப் பிரிவு (ஆண்டு 9,10,11) மேல்பிரிவு (க.பொ.த.உயர்தரம்) என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும்.

பாடசாலை ரீதியான போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான போட்டிகள் கோட்ட மட்டத்திலும் பின்னர் வலய மட்டத்திலும் எம்மால் நடாத்தப்படும் அதற்கான விடயத் தலைப்புகளும், திகதிகளும் பின்னர் அறிவிக்கப்படும். (36)

# யாழ்.காக்கைதீவு கடற்கரையில் நகரக்கழிவுகள் கொட்ட எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.காக்கைதீவுப்பகுதி கடற்கரையோரங்களில் யாழ். மாநகர சபையினரால் நகரக்கழிவுகள் கொட்டப் படுகின்றமைக்கு அப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்புத் தெரிவித் துள்ளனர்.

மேற்படிப் பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்து யாழ்.மாநகர சபையினரால் நகரக்கழிவுகள் குப்பை கூழங்கள் என்பன கொட்டப்படுவதால் அப்பகுதி மக்களின் சுகாதார நிலைமைகள் பாதிக்கப்படுகின்றன.

இதனால் இப்பகுதி மக்களுக்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுகிறது. இதனைச் சுட்டிக் காட்டியே இவ்வாறு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் இவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் முற்பகல் மாநகரசபையினரால் கழிவுகள் அகற்றப்படும் இடத்தில் ஒன்றுதிரண்ட மக்கள் அப்பகுதிகளில் கொட்டுவதற்காக வழமைபோல் கழிவுப்பொருட்களை ஏற்றிவந்த உழவு இயந்திரங்களைத் திருப்பியனுப்பினர்.

இதனையடுத்தே யாழ் மாநகர சபையினர் யாழ்.நகரிலும் அதனை அண்டியுள்ள யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும கழிவு அகற்றும் நடவடிக்கைகளை காலவரையறையின்றி நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் இடைநிலைக்கல்வியின் தரத்தை உயர்த்தும் திட்டத்திற்கு 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் இடைநிலைக்கல்வியின் அடிப்படைப் பிரச்சினைகள் அதாவது சர்வதேச ரீதியில் ஒப்பிடும் போது பற்றாக்குறையாக உள்ள கல்வித் தரத்தை உயர்த்தவே இந்நிதி வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இத்திட்டம் கற்றல், கற்பித்தல் மூலாதாரங்கள் ஆசிரியர்களின் திறமை என்பன ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தை இன்றும் அடையாத 1000 பாடசாலைகளின் தரத்தை உயர்த்த உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் கல்விக்காகச் செலவிடும் பண வீதம் குறைவு எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.இக் கல்வித் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 47 மில்லியன் டொலர்களாக வுள்ளபோதும் அரசினால் 10.3 மில்லியன் டொலரே ஒதுக்க முடிகிறது.

# ஜாதிகஹெலஉறுமய–சிகலஉறுமய முறுகல்
# பதவிப்போட்டியின் விளைவு

கடந்த தேர்தலில் இன வாத அறுவடை மூலம் 9 ஆசனங்களைப் பெற்ற ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளமை வெளிப்பட்டிருக்கிறது. அக்கட்சிக்குள் சிகல உறுமயவின் தலையீடு அதிகரித்துவிட்டதாகச் சில ஹெல உறுமயபிக்குகள் வெளிப்படையாகவே குரலெழுப்பத் தொடங்கியமையால் இந்தப் பிளவு வெளிப்பட்டிருக்கிறது.

ஆனால் எப்பொழுது தேர்தலில் ஒன்பது ஆசனங்கள் கிடைத்ததோ அன்றே ஜாதிக ஹெல உறுமயவில் முரண்பாடுகளும் பிளவுகளும் ஆரம்பித்து விட்டதாகவே கூறவேண்டும். சபாநாயகர் தெரிவுக்கு முதல் தினம் பெளத்த பிக்குகளான இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடத்தப்பட்டதும் சபாநாயகர் தெரிவில் இருவர் ஆளும் கட்சி வேட்பாளரை ஆதரித்ததும் ஏனையோர் எதிர்க்கட்சி வேட்பாளரை ஆதரித்ததும் இதனையே காட்டியது. ஆனால் இப்பொழுது பிளவு மேலும் வலுவடைந்து வருகிறது.




இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவுக்குள் பூகம்பம் வெடிக்க முக்கிய காரணம் பிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சிகல உறுமய அழுத்தம் பிரயோகிப்பதே எனக் கூறப்படுகிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்காகவே இக்கட்சி தோற்றம் பெற்றாலும் இது ஒரு புதிய கட்சி எனக் கூறிவிட முடியாது. சிங்களயே மகா சம்பத்த பூமிபுத்திர பக்ஷய, மகாசங்கத்தினர், ஹெல உறுமய, ஜாதிக சிந்தனய, எக்சத் பிக்கு பெரமுன, தேசப் பிரேமி பிக்கு பெரமுன போன்றவற்றின் கூட்டுக் கலவையான சிங்கள வீர விதானவின் ஒருவடிவமான சிகல உறுமயவினால் உருவாக்கப்பட்டதே ஜாதிக ஹெல உறுமயவாகும்.

ஜே.வி.பி மக்கள் ஐக்கிய முன்னிணியுடன் சிகல உறுமயவும் மேலும் பல அமைப்புக்களும் இணைந்து தேசப்பற்றாளர் தேசிய இயக்கம்ரணில் அரசாங்கத்தின் காலத்தில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதி ரான பல போராட்டங்களை நடத்தியது.

இதன் அறுவடையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தவாறு ஜே.வி.பி மேற்கொள்ள முயன்றது. ஆனால் இதற்குக் குறுக்கே புகுந்த சிகல உறுமய ஜாதிகஹெல உறுமய என்ற பெயரில் பிக்குகளைத் தேர்தலில் நிறுத்தி ஒன்பது ஆசனங்களைப் பெற்றது.

இந்த ஒன்பது ஆசனங்களும் சு.க-ஜே.வி.பி கூட்டைப்பொறுத்தவரை தமக்கே கிடைத்திருக்க வேண்டும் என்பதே அவர்களின் கருத்தாகும். அதனால் இக் கூட்டமைப்பு அதிலும் குறிப்பாக ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமயவை விரோதத்துடனேயே நோக்குகின்றது.

இக்கட்சியானது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது முதல் ஜே.வி.பியின் நெருக்குவாரத் தைச்சந்தித்தது. இக்கட்சியின் வேட்பாளர்களாக முழுவதும் பிக்குகளே தெரிவு செய்யப்பட்டனர். இதனால் இப் பிக்குகள் தங்கியிருந்த விகாரைகள் கூட ஜே.வி.பியினரின் தாக்குதலுக்கு உள்ளாகின.



பிக்குகள் அரசியலில் நேரடியாக ஈடுபடலாமா? என்ற விவாதத்தை ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தல்காலத்தில் தீவிரமாக நடத்தின. மகா சங்கத்தினர், பீடாதிபதிகள் பலர் இவ்வாறு பிக்குகள் தேர்தலில் குதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை சிகல உறுமயவே இப்பிக்குகளைத் தூண்டிவிட்டு தேர்தலில் நிறுத்தியிருந்தமை வெளிப்படையாதலால், தேர்தலில் வெற்றி பெற்றபின் பிக்குகள் பதவிகளைத்துறக்க அந்த இடத்திற்கு சிகல உறுமய உறுப்பினர்கள் வருவார்கள் என்றவாறான பிரச்சாரத்தை ஜே.வி.பி செய்துவந்தது. ஆனால் எக்காரணம்கொண்டும் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டோமென சிகல உறுமய அவ்வேளையில் வாக்குறுதி வழங்கியது.

ஆயினும் கூட சிகல உறுமய, ஜாதிக ஹெல உறுமயவின் நடவடிக்கைகளை எவ்வளவு காலம்தான் பார்த்துக்கொண்டிருக்கும்? -சிகல உறுமயவின் தலைமைத்துவம் பதவி ஆசையைத் துறந்த ஒன்றல்ல என்பது முன்னரே நிரூபனமாகிவிட்ட ஒன்றாகும். அதாவது 2000 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் சிகல உறுமயவுக்குக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தையார் பெற்றுக்கொள்வது என்பதில் அமைப்பாளராகிய சம்பிக்க ரணவக்க தலைவர் எஸ்.எஸ்.குணசேகர, செயலாளர் திலக்கருணாநாயக்கவுக்கிடையே போட்டி நிலவியது. ஒருவருடம் மட்டுமே அப் பாராளுமன்றம் நீடித்திருந்தது. ஆனால் பெளத்தரல்லாதவர் என்ற காரணத்தால் எஸ்.எல் குணசேகர ஓரம்கட்டப்பட்டார். இந்த இழுபறி அடுத்த தேர்தலில் பிரதிபலித்தது.

இம்முறை 6 மாதங்கள் பொறுத்திருந்த சிகல உறுமய ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைவது போலத்தெரிகிறது.

ஆனால் இம் முறை ஒட்டுமொத்தமாக அனைத்துப் பிக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வெளியேற்றி பா.உ. பதவிகளைப் பெற்றுக்கொள்வது சிகல உறுமவினால் முடியக் கூடியதாக இராது. ஆனால் ஒரு சில பா.உ. களைப் பதவி விலகச் செய்து சம்பிக்க ரணவக்க போன்றோர் பா.உ.களாக பதவியேற்கக் கூடும்.

இதேவேளை சிகல உறுமயவிலிருந்து திலக்கருணாரத்ன வெளியேறி ஐ.தே.கவில் இணைந்திருப்பது அக்கட்சித் தலைவர் சம்பிக்க ரணவக்கவின் புதிய நகர்வு குறித்த முரண்பாட்டையே வெளிப்படுத்துகின்றது. ஐக்கிய தேசியக்கட்சி இன்னமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளையே வலியுறுத்துகிறது. இதற்கு முற்றிலும்முரணான அமைப்பிலிருந்து திலக் கருணா ரட்ண வெளியேறி வந்து ஐ.தே.க.வில் இணைந்துகொண்டமையானது சிகல உறுமயவுக்குள் எழுந்துள்ள தீவிர முரண்பாட்டையே காட்டுகிறது.

அதேவேளை ஹெல உறுமயவும் சிகலஉறுமயவின் தலையீட்டை எதிர்த்து நிற்பதானது சிகல உறுமய மேற்கொண்டுள்ள தீவிரமான முடிவொன்றை வெளிப்படுத்துகின்றது.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை இனவாதம் என்பது இலகுவாகப் பதவியைப்பிடிக்கும் மார்க்கமென்பது வெளிப்படையான ஒருவிடயமாகும். எவ்வளவுதான் நெருக்கடிகளைச் சந்திக்கின்றபோதும் இனவாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவிருப்பதை ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற கட்சிகள் பெற்றுவரும் வெற்றி -வளர்ச்சி என்பன எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இவையெல்லாம் அரசியல்வாதிகளைப் பொறுத்து அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டிக்கானதே. அவர்கள் சிங்கள மக்களை எவ்வகையிலேனும் ஏமாற்றி பதவியைப்பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இம்முறை சிகல உறுமய பௌத்த பிக்குகளைக் காட்டி தேர்தலில் குறிப்பிடத்தக்க பெறுமதியான ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. அவற்றைத்தொடர்ந்து பிக்குகளிடமே விட்டுவைத்திருக்காது என்பதையே சிகலஉறுமய, ஜாதிகஹெல உறுமய என்பவற்றுக்கிடையேயான முறுகல் வெளிப்படுத்துகின்றது.

**வேலவன்**

---

# வீதிகளில் குவிக்கப்பட்டுள்ள கல், கிரவல்களால் சிரமம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் வீதிகளில் குவிக்கப்பட்ட கிரவல் கும்பி, கற்கும்பிகளினால் வீதிப்போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாக உள்ளது. மருதங்கேணி, பருத்தித்துறை வீதியில் கிரவல் கும்பிகள் கடந்த ஒரு மாதமாகவும், தாளையடி செம்பியன்பற்று வீதியில் கல்லுக்கும்பிகள் கடந்த ஆறு மாதங்களாகவும், வேம்படி எலிசபெத் வீதியில் கிரவல் கும்பி ஒரு மாதகாலமாயும் குவிக்கப்பட்டுள்ளது. இதில் மருதங்கேணி-பருத்தித் துறை வீதியில் நல்ல நிலையில் உள்ள வீதியில் கிரவல் குவிக்கப்பட்டுள் ளது. மற்றைய வீதி தற்போது மழை நீரினால் நிரம்பியுள்ளது. இதனால் இவ் வீதியால் பயணம் செய்யும் மக்களுக்கும்,வாகனங்களுக்கும் பெரும்இடையூறுகள் ஏற்படுகின்றது.

தாளையடி செம்பியன்பற்று வீதியில் குவிக்கப்பட்ட கல்லுக் கும்பிகள் சிதறிக் காணப்படுவதால் இவ்வீதியினால் பயணம் செய்ய முடியாமல் உள்ளது. வேம்படி எலிசபெத்வீதியில் உள்ள கிரவல கும்பியினால் உடுத்துறை ம.வி மாணவர்கள் பெரும் துன்பப்படுவதை காணக்கூடியதாய் உள்ளது. மழையினால் கரைந்து வீதியில் கிரவல் தண்ணி செந்நிறத்தில் உள்ளதால் வீதியினால் வரும் வாகனங்களினால் தண்ணீர் பறந்து வெள்ளைச்சீருடைகளை செந்நிறமாக்குகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)

## கல்மடு நகரில் விவசாயக் கருத்தரங்கு

(கண்டாவளை)

கிளி/மாவட்டத்தில் நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட விவசாயப் பயிற்சி வகுப்பும், கருத்தரங்கும் கல்மடு நகர் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழனன்று வட்டக்கச்சி பிரதேச த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் ச.லொயிற் தலைமையில் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. (14)

# பெருமளவு நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் பெருமளவான நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக முரசுமோட்டை, கண்டாவளை, பெரிய குளம், புளியம்பொக்கணை, பிரமந்தனாறு ஆகிய பகுதிகளிலே நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. மேலும் மழை தொடரும் பட்சத்தில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள் முற்றாக அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இப் பிரதேசத்தில் உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள் பல வருடகாலமாக எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமையால் வாய்க்கால்கள் தூர்ந்துள்ளதால் மழைவெள்ளம் நெல்வயல்கள் ஊடாகவே பாய்ந்துசெல்கிறது. அத்துடன் பல விவசாயிகள் விதைப்பு வேலைகள் மேற்கொள்ளாத வயல்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் விதைப்பு வேலைகள் மேற்கொள்ள முடியாது விவசாயிகள பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கிவருகின்றனர். (14)

## நீர்மட்டம் உயர்வு

(மன்னார்)

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் நீர்மட்டம் 6.25 அடியாக உயர்ந்துள்ளது. ஒரு அடியாக இருந்த இக் குளத்தின் நீர்மட்டம் மன்னாரில் தற்சமயம் பெய்த மழை காரணமாக இக்குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. (மி)


# பேச்சுவார்த்தைக்கான தற்போதைய கரிசனை எதற்காக?

'நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார். அவர் இலங்கை வந்ததும் புதிய திருப்பங்களை வெளியிடுவார். பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் விடுதலைப்புலிகளின் கைகளிலேயே தாங்கியுள்ளது" என்ற அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றுக்கள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவது போன்றதானதொரு தொனியில் உள்ளது.

ஆனால், நாம் இதுவரையில் அறிந்தவரை சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் அரசதரப்பின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணக்கூடிய வகையில் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை.

இதேபோன்று தெற்கின் அரசியற் சூழ்நிலையிலும் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை. அதாவது சமாதானத்திற்கு எதிரான சக்திகள் குறிப்பாக ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற சக்திகள் இன்னமும் முழு அளவில் சமாதான முயற்சிகளை எதிர்த்து வருகின்றன.

இவ்வாரத்தின் தொடக்கத்தில் கூட "இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்க முன்வந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என அரசாங்கத்தை எச்சரித்துள்ள ஜே.வி.பி. கடந்த காலத்தை மறந்துவிட வேண்டாம் எனவும் அச்சுறுத்தியுள்ளது.



இருப்பினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில அவசியத் தேவை கருதி நிர்ப்பந்தம் கருதியாயிலும் காரணமாயினும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அடுத்த வாரத்தில் சில அறிவிப்புக்களை வெளியிடலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகையதொரு அறிவிப்புவரும் என பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் ஊர்ஜிதம் செய்கின்றது. ஐ.தே.கட்சியின் ஊகத்தின்படி "ஒஸ்லோ பிரகடனத்திற்கு உட்பட்ட வகையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைகுறித்துப் பேசுவதற்கான அறிவிப்பு இவ்வாரம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் வெளியிடப் படலாம்" என்பதாகிறது.

இந்தவகையில் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டதுபோல் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் அடுத்தவாரத்தில் கொழும்பு வந்ததும் சமாதான முயற்சி தொடர்பான அறிவிப்புக்களை சனாதிபதி சந்திரிகா வெளியிடுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கக்கூடும். ஆனால மங்கள சமரவீர கூறியதுபோன்று புதிய திருப்பங்கள் என்பது கேள்விக்குரியதொன்றே.

இந்நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் தற்பொழுது பேச்சுவார்த்தை குறித்து அறிவிப்புச் செய்ய வேண்டிய அவசியம் ஏன் எழுந்துள்ளது? என்பதே. அதாவது உடன்பாட்டில் அரசியற் சூழ்நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படாத நிலையில் இத்தகைய அறிவிப்பை அரசதரப்பு ஏன் வெளியிட்டது? சமாதான முயற்சிகளில் அரசாங்கத்திற்குத் திடீரென அதிக அக்கறை ஏற்பட்டது ஏன்?

இவற்றிற்கு தற்போதைய சூழ்நிலையில் இரண்டு காரணிகளை வெளிப் படுத்த முடியும். இதில் ஒன்றோ அல்லது இரண்டோ அன்றி இரண்டுமோ அரசாங்கத்தின் இச்செயற்பாட்டிற்குக் காரணமாக இருந்திருக்கலாம். இதில்,

1.விடுதலைப்புலிகளின் அரசியல்குழுவின் சுமார் ஒருமாதகால ஐரோப்பிய பயணம்.

2.அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடியும் தேவைப்படும் சர்வதேச நாடுகளின் நிதியுதவி.

விடுதலைப்புலிகளின் அரசியல்குழுவின் சுமார் ஒருமாத காலச் சுற்றுப் பயணமானது கடந்தகாலத்தில் புலிகளின் பிரதிநிதிகள் மேற்கொண்ட பயணங்களில் இருந்து சற்றுவேறுபட்டது. அதாவது கடந்தகாலப் பயணங்களின்போது பிரதானமாக விடுதலைப்புலிகள் தமிழர் தரப்புடனான அதாவது வெளிநாடுகளிலுள்ள நிபுணர்கள் சட்டவல்லுனர்கள் ஆகியோரை தமது ஆலோசகர்களுடனான சந்திப்புக்களுடன் தொடர்புபட்டதாகவே இருந்தது. சில வெளிநாட்டுப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதும் இராஜீக ரீதியிலான தொடர்புபட்டவையாக அவை இருந்தமை குறைவே.

ஆனால் இம்முறை புலிகளின் அரசியல் குழுவில் பங்கேற்றவர்களும்-விடுதலைப புலிகள் நடத்திய சந்திப்புக்களும் கடந்த காலத்தைவிட வித்தியாசமானவை. ஒருபுறம் விடுதலைப் புலிகளின் குழுவில் பங்கேற்றவர்களில் புலிகளின் அரச கட்டமைப்பின் பகுதிகளான காவற்துறை, நீதித்துறைப் பொறுப்பாளர்கள் பங்கேற்றமை இவ் அரசியல் குழுவின் பரிமானத்தை வேறுபடுத்திக் காட்டியது.

அடுத்ததாக கடந்தகாலத்தைப் போன்று தமது சட்டவல்லுனர்களையும், நிபுணர் களையும் விடுதலைப்புலிகள் சந்தித்திருப்பினும் இம்முறை பல ஐரோப்பிய நாட்டு அரச பிரதிநிதிகளுடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர். இச்சந்திப்புக்களில் அதியுயர் மட்டத்தலைவர்களுடன் இடம்பெறவில்லை. ஆயினும் விடுதலைப் புலிகளும் இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் இச் சந்திப்புக்கள் ஒருவகையில் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த அங்கீகாரமாக இருக்கையில்- மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டிற்கான நியாயபபாட்டினை அந்நாட்டு அரசாங்கங்களுக்குப் புரிய வைக்கவும் இப்பயணம் உதவியது.

இந்தவகையில் தம்மைச் சந்தித்த மேற்கு ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளனர். இதில் முக்கியமாக இரண்டு விடயங்கள் உறுதிபடத் தெளிவுபடுத்தப்பட்டது.

1.இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கோரிக்கைகளை நியாயப்பாடு குறித்தும் இது தொடர்பாக எவ்வேளையிலும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளனர் என்பதும்,

2.சமாதானப் பேச்சுவார்த்தைகள் காலம் கடத்தப்படுவதினால் தமிழ் மக்கள் விரக்திநிலை அடைந்து செல்கின்றனர் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

இந்தவகையில் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தமது கொள்கை விளக்கமானது சிறிலங்கா அரசாங்கத்திற்கு சங்கடத்தைத் தோற்றிவித்திருத்தல் வேண்டும். இது ஒருவேளை சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் மீது ஓரளவேனும் அழுத்தத்தைக் கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கக்கூடும்.

இதற்கு அடுத்ததாக சிறிலங்கா அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியானது வெளிநாட்டு உதவிகளை எவ்வாறேனும் பெற்றுக்கொள்வதற்கான அவசியத்தை உண்டு பண்ணியுள்ளதெனலாம். அதாவது எரிபொருள் விலையேற்றம். அதனைத் தொடர்ந்து அனைத்துப் பொருட்களின் விலையேற்றமும் அரசாங்கத்தை அச்சுறுத்தும் அளவிற்குப் பாரிய நெருக்கடியாக எழுந்துள்ளது. ஆனால் அரசாங்கத்திடம் இதனைத் தீர்த்துவைப்பதற்கான திட்டமோ, வசதியோ இல்லை.

இந்நிலையில் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதனால் அவர்கள் வலியுறுத்தி வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான அறிவிப்புக்களை அரசாங்கம் வெளியிட வேண்டியது அவசியமானதாகும். இந்த வகையிலேயே தற்பொழுது அரசாங்கத் தரப்பில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான அறிவிப்புக்கள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிலும் குறிப்பாக ஜப்பானின் விசேட தூதுவர் யசூசிஅகாசி இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கையில் இவ்வறிவிப்பை அரசாங்கம் வெளியிடுவதானது அரசாங்கம் அகாசிமூலம் தனது தேவைகளை நிறைவுசெய்துவிட முற்பட்டுள்ளது போன்றேயுள்ளது.

யசூசி அகாசி மூலம் தனது பொருளாதார தேவையை நிறைவுசெய்ய அரசாங்கம் பெரும் ஆர்வம் கொண்டுள்ளது என்பதை ஜே.வி.பி.யினர் அகாசியைச் சந்திக்க காட்டிய ஆர்வத்தில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.


ஜே.வி.பி.யைப் பொறுத்து அகாசியை அவர்கள் சந்திக்க மேற்கொண்ட முயற்சியும் நிதியுதவி வழங்குமாறு விடுத்த கோரிக்கையும் அரசாங்கம் சந்திக்கும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை வெளிப்படுத்தக் கூடியவையாகும். ஏனெனில் ஜே.வி.பியினர் இதுவரையில் வெளிநாட்டு உதவிகளைக் கேட்டுப்பெறுவது குறித்துப் பலத்த ஆட்சேபத்தைப் பேச்சளவில் ஆயினும் வெளிப்படுத்தி வந்தவர்கள். அது மட்டுமல்ல கடந்தமுறை யசூசி அகாசி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வேளை ஜே.வி.பி.யைச் சந்திக்க அவர் விடுத்த கோரிக்கை கூட ஜே.வி.பி.யால் நிராகரிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இம்முறை ஜே.வி.பி.யினர் யசூசி அகாசி அவர்களுடனான சந்திப்பிற்கு தாமே நேரம் கோரிப்பெற்றனர். இந்தவகையில் வெளிநாட்டு உதவிகள் தொடர்பாகவும், ஜப்பான் தொடர்பாகவும் ஜே.வி.பி.யினரின் நிலைப்பாடு மாற்றம் அடைந்தமைக்கு நாடு எதிர்நோக்கும் நெருக்கடியே காரணமாகும். வேறுவிதமாகக் கூறுவதானால் இவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவுசெய்ய சர்வதேச நிதி உதவி பெறுவதைத் தவிர வேறுவழியில்லை.

இந்தவகையில் விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பயணங்களும், ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி அவர்களின் இலங்கை வருகையும் சிறிலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துத் தீவிரமாகப் பேசுவதற்கு காரணங்களாக இருத்தல் வேண்டும். இதனைத் தவிர சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெரும் முன்னேற்றங்கள், திருப்பங்கள் எவையும் ஏற்படுவதற்கான சூழ்நிலை மாற்றங்கள் எவையும் ஏற்பட்டதாக இல்லை.

சிலவேளைகளில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளில் சிறிது முன்னேற்றம் காணவிரும்பினும் கூட ஜே.வி.பி.யின் நிலைப்பாடானது இதற்கு இடம் தருவதாக இருக்கப்போவதில்லை என்பதை ஜே.வி.பி.யின் அண்மைய செயற்பாடுகளே வெளிப்படுத்துமாப் போன்றதாகவுள்ளது.

அதாவது ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகாவின் செயலுக்கு மதிப்பளித்தோ அன்றி கூட்டணிக்கட்சி என்ற ரீதியில் அவரின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றோ செயற்படப்போவதில்லை என்பதற்கு அண்மையில் சனாதிபதி சந்திரிகாவை இழிவுபடுத்தும் வகையில் ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் பேசியுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.



ஐ.தே.கட்சி அரசாங்கத்தினால் முடக்கி வைக்கப்பட்டிருந்த சனாதிபதி சந்திரிகாவைத தாமே மீட்டெடுத்து அவருக்கு அதிகாரத்தை வழங்கியதாகவும், அக்காலத்தில் அவர் இரவில் நித்திரை கொள்ளாது பகலிலேயே நித்திரை செய்ததாகவும், இதனால் முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்பட்டதாகவும், தெரிவிக்கும் விமல்வீரவன்ச தற்பொழுது இதனை மறந்து சிலர் செயற்படுவதாகவும், கண்டனமும் எச்சரிக்கையும் செய்துள்ளார்.

அத்தோடு "இவ் இடைக்கால நிர்வாக யோசனையை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. அதனையும் மீறி அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுக்க முனையுமானால் அரசாங்கம் பலவிதமான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்" எனவும் அவரால் எச்சரிக்கப்பட்டும் உள்ளது.

இதேசமயம் யசூசி அகாசியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஜே.வி.பி.யினர் சமாதானப் பேச்சுவார்த்தையுடன் நிதியுதவியைத் தொடர்புபடுத்த வேண்டாம் எனக்கோரிக்கை விடுத்ததில் இருந்தே ஜே.வி.பி. நிதியுதவிக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைக்கத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக விரைவில் திருப்பங்கள் ஏற்படலாம் என அறிவிப்புச் செய்துள்ளமையானது, தற்போதைய தேவைக்கேற்ற அறிவிப்பேயொழிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான உறுதியான நிலைப்பாட்டுடன் கூடியதான அறிவிப்பாக இருக்க முடியாது.

அவ்வாறு இல்லாது உறுதியானதொரு நிலைப்பாட்டு மாற்றம் ஏற்பட்டிருப்பின் இதுவரையில் அதுதொடர்பான தகவல்கள் உறுதிசெய்யப்பட்டதாகிவிடும். ஆனால் அத்தகையதொரு மாற்றமும் ஏற்பட்டமைக்கு உறுதியான தகவல் எதுவுமில்லை.

இந்தவகையில் அரசாங்கத் தரப்பின் தற்போதைய அறிவிப்பானது பருவகால வானிலை மாற்றம் போன்றது. அதாவது காலத்திற்குக் காலம் அரசாங்கம் சமாதானம் குறித்துப் பேசுவதும் பின்னர் கைவிடுவதும் போன்றதாகும். இந்தவகையிலேயே தற்பொழுதும் மழைக்கால பருவமாற்றத்தை மக்கள் எதிர்பார்ப்பதுபோல் நிதியுதவிக்காக அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசுகின்றது என்பதே உண்மையாகும்.

ஜெயராஜ்.

## சமாதான நல்லிணக்க சபையில் பங்கேற்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

நாளை திங்கட்கிழமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட்டவிருக்கும் தேசிய சமாதான நல்லிணக்கசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற அரசியல் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே தமது தனித்தரப்பு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்து இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்திருந்தது.

ஆனால், தற்போது கலந்துகொள்வது எனத் தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானத்தை கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தேசிய சமாதான நல்லிணக்க சபைச் செயலாளருக்கு அறிவித் துள்ளார்.

## ரயில் விபத்தில் பாதிப்புற்ற பிக்கு ரூ.10 மில்லியன் இழப்பீடு கோரல்

(கொழும்பு)

ரயில் விபத்தில் காயமடைந்த பௌத்த பிக்கு ஒருவர் சிறிலங் காவின் ரயில்வே அதிகார சபை யிடம் பத்து மில்லியன் ரூபாய் களை நட்ட ஈடாகக் கோரியுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

கண்டி அஸ்கிரிய மகா விகாரையின் ஹனுபொலகம வஜிர தேரர் என்ற பிக்கு கடந்த 2002 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் திகதி பத்திற்கு மேற் பட்டோர் உயிரிழந்த விபத்தானது ரம்புக்கன என்ற இடத்தில் இடம் பெற்ற 'இன்ர சிற்றி' அதிவேக ரயில் விபத்தில் தானும் படுகாயம் அடைந்து நிரந்தர அங்கவீன மாகியுள்ளதாகவும் தனது விலா எலும்புகள் மூன்று உடைந்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் விபத்தில் படுகாய மடைந்து கண்டி வைத்தியசாலை யில் பன்னிரெண்டு நாட்களும் பின் கொழும்பு தேசிய வைத்தி யசாலையிலும் சிகிச்சை பெற்ற தாகவும் இவ்விபத்தினால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டவராக ஆகியுள்ளதாகவும் தனது முறைப் பாட்டில் தெரிவித்துள்ள இப் பிக்கு சிகிச்சைக்காக தான் இது வரை பதினைந்து இலட்சம் ரூபாய்களுக்கு மேல் செலவழித் திருப்பதாகவும் குறித்த ரயிலின் இயந்திரத்தின் 'பிரேக்' தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட கோளாறே விபத்திற்குக் காரணம் என்றும் இதனால் ரயில்வே அதிகார சபையிடமிருந்து பத்து மில்லியன் ரூபாய்களை நட்ட ஈடாக பெற்றுத் தரும்படியும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளதோடு சிறிலங்காவின் ரயில்வே அதிகார சபை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட் டுள்ளார்.

இப் பிக்குவின் மனு மீதான வழக்கினை நீதவான் அடுத்த ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திப் போட்டுள் ளதாக 'டெய்லி நியூஸ்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட் டுள்ளது.

## கொள்ளையர் குழுவை விடுவிக்க ஹெல உறுமய பிக்கு தீவிர முயற்சி

(கொழும்பு)

கொழும்பு மருதானையிலுள்ள மருந்து விற்பனை நிலைய மொன்றை கொள்ளையடித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பபட்டுள்ள ஐந்து சந்தேக நபர்களையும் விடுவிக்க ஹெல உறுமய எம்.பியான பௌத்த பிக்கு உட்பட பல அரசியல் வாதிகள் அதிக பிரயத்தனம் எடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த 19ஆம் திகதி மேற்படி மருந்து விற்பனை நிலையத்தில் புகுந்த கொள்ளையர்குழு அங்கிருந்து கணிசமான பணத்தை கொள் ளையிட்டு சென்றுள்ளது. இதன் பின்னர் கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் வீடொன்றை சுற்றிவளைத்து பொலிசார் 5 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆதரவாளரின் சகோதரன் என்ற வகையில் சந்தேக நபர்களை மீட்க அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் போன்றோர் பொலிஸ் நிலையம்சென்று பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்

### மணல் அகழ்வை தடுக்க வலியுறுத்து

புத்தளம் பகு தியில் மணல் அகழ்வும் ஏற்றிச் செல்லலும் அதி கரித்துச் செல்வ தனால் அதனை உடன் தடுத்து நிறுத்துமாறு மீண்டும் மக்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதுகுறித்த நட வடிக்கைகள் எடுக்கப்படாவிடின் எதிர்ப்பு நட வடிக்கைகளில் தாம் ஈடுபட நேரி டும் எனவும் மக் கள் தெரி வித் துள்ளனர்.


தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்




இப்பாட நெறிக்கான காலம் 4 மாதங்கள்

ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதிவுகள் 30/11/04 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பா நெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.

கணினியியல் கல்லூரி

The Computer Collage

யாழ்சாலை, கிளிநொச்சி.

(Affiliated to Asian Computers) (சி-105


## மாணிக்கக்கல் அகழ்வு அனுமதியால் சுற்றாடலுக்கு பாரியளவில் பாதிப்பு

### வழக்குத் தாக்கல் செய்யவும் முடிவு

(கொழும்பு)

பொகவந்தலாவ கெசல் கமுவ ஓயாவில் மேற்கொள்ளப்படும் மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக் கையால் பாரிய சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் சட்டத்திற்கு உட்பட்ட விதத்திலும் சட்டத்திற்குப் புறம்பான விதத்திலும் மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக் கைகள் இடம்பெற்று வரு கின்றன. இந்த மாணிக்கக்கல் அகழ் விற்காக பெக்கோ இயந்திரம் பயன்படுத் தப்படுவதால் பெருமளவு சேறு காசல்றீ நீர்த்தேக் கத்தில் குவியும் நிலை ஏற்பட்டுள்ளது

இதனால் சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்த முறைப் பாட்டையடுத்து சனாதிபதியின் பணிப்பின் பேரில் சிறிய நடுத்தர கைத்தொழில் பிரதி அமைச்சர் ஹ-சைன் பைலா பிரதேசத்துக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளார் இந்த நிலையில் சூழலுக்கு பாரிய பாதிப்பை ஏற் படுத்தியுள்ள இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியமை தொடர் பாக மாணிக்கக்கல் மற்றும் ஆப ரண அதிகார சபைக்கு எதிராக மத்திய சூழல் பாதுகாப்பு அதி கார சபை வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எச்சரித்துள் ளது

## கைத்துப்பாக்கி, குண்டுகளுடன் இருவர் பிலியந்தலயில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த இருவர் பிலியந்தல பொலிசாரால் பண்டாரகமவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரு பிஸ்ரல் மற்றும் இரண்டு 'கிரனைட்' கைக்குண்டுகள் என்பவற்றுடன் கைதாகியுள்ள இந்த இரண்டு நபர்களும் தெகிவளை, பண்டாரகம, மௌன்ட் லவேனியா ஆகிய இடங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருந்தனர் எனப் பொலிசார் கூறியுள்ளனர்.

## நாட்டின் தற்போதைய தேர்தல் சட்டம் விரைவில் மாற்றப்படுவது அவசியம்

### -முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளர் வலியுறுத்து

தற்போது நாட்டில் உள்ள தேர்தல் சட்டமானது மிக விரை வாக மாற்றப்பட வேண்டும். அப்போது தான் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்த முடியும் இவ்வாறு முன் னாள் உதவி தேர்தல் ஆணை யாளர் பந்துல குலத்துங்க தெரிவித் துள்ளார். தற்போது நாட்டில் உள்ள தேர்தல் சட்டத்தினை மாற்றியமைப்பது தொடர்பாக முதல் முறையாக வடக்கு கிழக்கு மாகா ணத்தில் வவுனியா மாவட்டத்தில் பெப்ரல் அமைப்பும் சர்வோதய அமைப்பும் இணைந்து கலந் துரையாடல், கருத்துப்பகிர்வு கூட் டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்வில் விஷேட பிரதிநிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நாட்டில் உள்ள அனைத்து சிவில் சமூகத்தினரும் ஒரு சட் டத்தைத் தீர்மானிப்பவர்களாக இருக்க வேண்டும். ஆனால் எமது நாட்டில் அவ்வாறு இல்லை. எனவேதான் பெப்ரல் அமைப்பும் சர்வோதய அமைப்பும் முன் னோடியாக அரசு தேர்தல் சட் டத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் இந்த சந்தர்ப் பத்தில் நாட்டு மக்களின் கருத் துக்களைக் கேட்டு அவர்களின் விருப்பு வெறுப்புக்கு முக்கியத் துவம் கொடுக்கும் முயற்சியை எடுத்துள்ளது. தற்போது உள்ள சட்டத்தினை நிச்சயமாக மாற்ற வேண்டும் என்பதில் அரசியல் வாதிகளில் இருந்து சாதாரண பொது மக்கள் வரை அனைத்துத் தரப்பினரும் மிகவும் தெளிவாக வுள்ளனர். அவ்வாறு தேர்தல் சட்டத்தை மாற்றும் போது சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதற்கு அப்பால் அனைத்து தரப்பினரை யும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்பது மிகவும் முக்கி யமாகும் என்றும் அவர் தெரிவித் தார். (21)


**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யா திருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய் யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)




**காணி விற்பனைக்குண்டு**

திருநகர் கனகராஜா வீதிக்கு அருகாமையில் பிரதான வீதியில் 1/2 ஏக்கர் வீட்டுக்காணி விற்பனைக் குண்டு தொடர்பு கொள்ளவும்.

இல 185,
திருநகர்,
கிளிநொச்சி (5229)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 - 11 - 1952



மறைவு 01 - 10 - 2004

அமரர்

சைவசமயத் தொண்டுகள் எம்மை வளமாக்கும் எனக் கூறிக்கொண்டு

அமரர்

**அருணாசலம் கோவிந்தசாமி**

அவர்கள்

சிறுவயதில் இருந்து வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய தொண்டுகளில் அரும்பணியாற்றி வந்தார். அத்துடன் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய அன்னதான சபையின் தலைவராக இருந்து சேவை செய்யும் தொண்டர்களுடனும் வரும் அடியார்களுடனும் இன்முகம்காட்டி இனியவார்த்தை பகர்ந்து கடமையைக் கண்ணியமாகச் செய்துவந்த ஓர் உத்தமனாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளை வேண்டுகிறோம்.

அங்கத்தவர்கள்,
வற்றாப்பளை கண்ணகை அம்பாள்
அன்னதானசபை.

(சி.10510)

# நிவாரணம்,புனர்வாழ்வு,மீளிணக்கத்துக்கான அமைச்சு
# வட கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டம்

## வட கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம்-கட்டம்-II
## பதவி வெற்றிடம்-வவுனியா மாவட்டம்

வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் கட்டம் II உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் வட-கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இம்மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அனுராதபுரம்,பொலன்னறுவை,மொனராகல,புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் 2005-2010 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது.

**வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களில் பணியாற்றுவதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் உடையவர்களிடமிருந்து சமூக வலுவூட்டலாளர் பதவிகளுக்கு (13) நிவாரணம்,புனர்வாழ் மீளிணக்கத்துக்கான அமைச்சினாலும் வடகிழக்கு மாகாண சபையினாலும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**இப்பதவிகளுக்காக 04.07.2004 தேசிய தினசரிகளில் செய்யப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும், மீளவும் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

01 **பொதுவிதிகள்**

பதவி தற்காலிகமானது. முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். அதன் பின் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும், முதல்வருட சேவைக்காலத்தில் திருப்திகரமாக சேவை ஆற்றிருப்பினும் தொடர்ந்து சேவை நீடிப்பு வழங்கப்படும்.

02 **வயதெல்லை:-** விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும்இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச கூட்டுத்தாபனங்களில் சேவையில் உள்ளவர்களுக்கும் ஓய்வுபெற்றவர்களுக்கும் இவ்வயதெல்லை பொருத்தமற்றது.

03 **சம்பளம்**

3.1 பட்டதாரிகள்.

தெரிவு செய்யப்படும் பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 9,375 உம் இடைக்காலப் படியாக ரூபா 2,200 உம் வழங்கப்படும். மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் இல.10ன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

ஆரம்பத்தில் இப்பதவி மூன்று மாத பயிற்சிக்காலத்தைக் கொண்டதாகவும், அதன்பின்பு ஒப்பந்த அடிப்படையிலும் அமையும். முதல் மாதத்திற்கான பயிற்சி திருகோணமலையிலும் அடுத்த இரண்டு மாதங்களுக்குமான பயிற்சி மாவட்ட திட்டப் பணிமனையிலும் இடம்பெறும்.

பயிற்சிக்காலத்தில் சகலதும் உள்ளடங்கலாக மாதம் ஒன்றுக்கு ரூபா 6,000/= வழங்கப்படும்.

3.2 டிப்ளோமா தகைமையுடையவர்கள்.

தெரிவுசெய்யப்படும் டிப்ளோமா தகைமையுடையவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 5,570உம் இடைக்காலப் படியாக ரூபா 2,200உம் வழங்கப்படும். மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல 10இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

3.3 க.பொ.த(உயர்தரம்) தகைமையுடையவர்கள்

தெரிவு செய்யப்படும் க.பொ.த (உயர்தரம்) தகைமையுடையவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 5,240 உம் இடைக்காலப்படியாக ரூபா 2,200 உம் வழங்கப்படும மேலதிக தகைமை, சேவை அனுபவம் இருப்பின் சம்பளம் முகாமைத்துவ சேவை சுற்று நிருபம் இல.10 இன் பிரகாரம் பேசித்தீர்க்கப்படும்.

04 **கொடுப்பனவுகள்:-**

4.1 சம்பளம் மாதாந்த அடிப்படையிலும், படிகள் செய்து முடிக்கப்படும் வேலைகளின் பெறுபேற்றின் அடிப்படையிலும் வழங்கப்படும்.

4.2 அரச திணைக்களங்களில் இருந்து விடுவிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் அவர்கள் இறுதியாகப்பெற்றுக்கொண்ட சம்பளத்தின் அடிப்படையில் பேசித் தீர்க்கப்படும். படிகள் செய்துமுடிக்கப்படும் வேலைகளின் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

05 விண்ணப்பதாரி (1) இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். (2) திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்தின் எந்தப்பகுதியிலாவது சேவை செய்யக் கூடிய உடல் ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (3) மையக்கிராமத்தில் வசித்து கடமைகளைச் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். (4) அறிக்கைகள் தயாரிப்பதிலும்,தொடர்பாடலிலும் போதிய ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

06 **விண்ணப்பிக்கும் முறை**

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித்தகைமை, தொழிற்தகைமை ஏனைய வேலை அனுபவங்கள் ஆகிய விபரங்கள் உள்ளிட்ட பூரணமான சுயவிபரத்தைக்குறிப்பிட்டு தமது விண்ணப்பத்தைத் தயாரித்து பிரதித்திட்டப்பணிப்பாளர்,மாவட்டத்திட்டப் பணிமனை, நியாப், கச்சேரி, வவுனியா எனும்முகவரிக்கு 15.11. 2004 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்களத்தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். பெண்களும் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

07 **தெரிவு முறை**


**தகுதியான விண்ணப்பதாரிகள் மாவட்ட ரீதியாக நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். இவற்றில் 50 வீதம்பெண்களுக்காக ஒதுக்கப்படும்.**


08 **கடமைகளும் பொறுப்புக்களும்**

- ⇨ திட்டம் பற்றி மையக்கிராம மக்களின் மத்தியிலும், பிரதேச மட்ட உத்தியோகத்தர் மத்தியிலும் கவனத்தை ஈர்க்கச் செய்வதுடன் அவர்களுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்துவது.
- ⇨ மைக்கிராமத்தின் சமூக பொருளாதார அறிக்கை, கிராம அபிவிருத்தித்திட்டம், சமூக செயல்திட்டம், ஜீவனோபாய ஆதார செயற்றிட்டம் என்பவற்றைத்தயாரித்தல்.
- ⇨ திட்டமிடுதலிலும் அமுல்படுத்துதலிலும்அனுசரணை வழங்குவதுடன் நிர்மாணப் பணிகளை ஒருங்கிணைப்பது
- ⇨ சிறு குழுக்களை அமைத்தல் , குழு ரீதியான சேமிப்பு கடன் திட்ட முகாமைத்துவம், கண க்குப்பதிவு என்பனவற்றில் பயிற்சிகளை வழங்குதல்.
- ⇨ கிராமத்தில் ஜீவனோபாய ஆதார செயற்றிட்ட நடவடிக்கைகள், சிறு குழுக்களை நிறுவுதல் , குழு ரீதியான சேமிப்பு,கடன் நடவடிக்கை, முகாமைத்துவம், கணக்குப் பதிவு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதும், ஒருங்கிணைப்பதும்.
- ⇨ கிராம அமைப்புக்களை அமைப்பு ரீதியாக வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உதவி செய்தல்.
- ⇨ கிராமத்தில் நடைபெறும் பயிற்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- ⇨ முன்னேற்ற அறிக்கைகளைத்தயார்செய்து அவற்றை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு சமர்ப்பித்தல் .

(02 ஆம் பக்கம் பார்க்க)

# கராச்சி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 2 வது இனிங்சில் சிறி.134/1விக்கெட்





பாகிஸ்தானுக்கு எதிராக கராச்சியில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று சிறிலங்கா தனது இரண்டாவது இனிங்சில் ஒருவிக்கெட்டை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் மூலம் சிறிலங்கா அணி பாகிஸ்தானை விட 136 ஓட்டங்களால் பின் தங்கியுள்ளது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்ட சனத்ஜெயசூரிய ஆட்டமிழக்காது 96 ஓட்டங்களையும், சங்கக்கார 5 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். அத்தப்பத்து 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் இரண்டாம் நாளில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 298 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து நேற்று தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 478 ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுனிஸ்கான் 124 ஓட்டங்களையும் இன்சமாம் உல்ஹக் 117 ஓட்டங்களையும் யுஹானா 46 ஓட்டங்களையும் சொய் மாலிக் 44 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப்பெற்றனர்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ், டில்கார பெர்னாண்டோ தலா 3 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்துக்கு இனிங்ஸ் வெற்றி

பங்களாதேஷுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையில் சிட்டக்கொங்கில் நடைபெற்ற இரண்டாவது இறுதியுமான டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்து அணி இனிங்ஸ் வெற்றியைப்பெற்றுக்கொண்டது.

முதல்போட்டியில் ஒரு இனிங்சில் 99 ஓட்டங்களால் வெற்றி பெற்ற நியூசிலாந்து இரண்டாவது போட்டியில் ஒரு இனிங்ஸ் 101 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இரண்டு போட்டிகொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற ரீதியில் நியூசிலாந்து அணி கைப்பற்றியது.

# அணித்தலைவர் கபிபுல் பஸார் மீண்டும் அணிக்குத்திரும்புகின்றார்

நியூசிலாந்து அணியுடனான 2 டெஸ்ட் போட்டியில் விளையாடாது இருந்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணித்தலைவர் கபிபுல் பஸார் நியூசிலாந்துடன் இடம்பெறவிருக்கும் மூன்று ஒரு நாள் போட்டிகளுக்கு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விரலில் உபாதை காரணமாகவே அவர் விளையாடாது இருந்துள்ளார். எனினும் ஒரு நாள் அணியின் தலைவராக பங்கேற்கின்றார். அணி விபரம்.

கபிபுல் பஸார் (அணித்தலைவர்), அகன்சலா, மொகமட் அஸ்ரபுல் சவி உமர், நவீர் இக்பால், இத்தார் அகமட்,முக்கீசா ரஹ்மான், மகுமுட், மக்சூர், முகமட் ரபிக், மன்சூர் இஸ்லாம்ரனா, பைசியா,குசேன் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

# இந்தியா டெஸ்ட் அணியில் நான்கு புதிய வீரர்கள் இணைப்பு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவதும் இறுதியுமான மும்பை டெஸ்ட் போட்டிக்கு இந்திய அணிக்கு நான்கு புதிய வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

கௌதம்ஹம்பீர், டியுராஜ் யாதவ் மற்றும் தமிழகத்தின் விக்கெட் காப்பாளரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான முரளிகார்த்திக், வேகப்பந்து வீச்சாளரானசிவசங்கர்போல் ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டவர்ளாவர்.

இதன் மூலம் அணியிலிருந்து பார்த்திப்பட்டேல்,யுவராஜ்சிங், ஆகாஷ்சோப்ரா, அஜித் அகாக்கர் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நான்காவது டெஸ்ட் போட்டி நவம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

# திட்டங்களை நிறைவேற்ற முடியாதுபோனதே நாக்பூர் தோல்விக்குக் காரணம்- ராகுல் ராவிட்



நினைத்த திட்டங்களை நிறைவேற்ற முடியாததாலேயே அணி தோல்வியுற்றது என இந்திய கிரிக்கெட் அணியின் தற்காலிக அணித் தலைவர் ராகுல் ராவிட் கூறினார்.

இத்தோல்வியின் மூலம் உள்நாட்டில் 35 ஆண்டுகளில் முதல் முறையாகத் தொடரை அவுஸ்திரேலியாவிடம் பறிகொடுத்துவிட்டது இந்தியா. நாங்கள் துடுப்பாட்டம் செய்த விதம் ஏமாற்றமளிக்கிறது. ஆனால் அணியின் அனைத்து வீரர்களும் கடினமாகப் போராடினர். சரியான மனப்பான்மையுடன்தான் விளையாடினர். ஆனால் துரதிஷ்டவசமாக எங்களது திட்டங்களை நிறைவேற்றி திறமையை வெளிப்படுத்தமுடியவில்லை.

நாக்பூர் ஆட்டம் மிகக் கடினமாக இருந்தது. அவுஸ்திரேலிய வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி, எங்களை வென்று விட்டார்கள்.

நாக்பூர் மைதானத்தின் சூழல் அவர்களுக்கு ஏற்றதாக இருந்தது. சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் தங்களைத் தயார் செய்துகொண்டார்கள்.


அவுஸ்திரேலிய அணி சிறந்த அணி. அவர்கள் இந்தியாவுக்கு அடிக்கடி வருவதும் அவர்களுக்கு உதவியாக இருந்துள்ளது. நாங்கள் ஒவ்வொரு வரும் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்றார். உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவுஸ்திரேலிய தற்காலிக அணித்தலைவர் கில்கிறிஸ்ட் இருந்தாலும், இந்த வெற்றியை மிகச் சிறந்த வெற்றியென ஒப்புக் கொள்ள மறுத்துவிட்ட அவர். சிறந்த திட்டமிடல்,கடின உழைப்பு இந்த வெற்றிக்குக்காரணம் என்றார்.




# முதலாவது உலகக்கிண்ண கபடி நவம்பரில் இந்தியாவில் ஆரம்பம்

முதலாவது உலகக்கோப்பை கபடிப்போட்டி மும்பையில் வரும் 19 முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. பாகிஸ்தான் ஜேர்மனி உட்பட 15நாடுகள் போட்டியில் பங்கேற்கின்றன. இங்கிலாந்து,மேற்கிந்தியத்தீவுகள்,கனடா, ஈரான், பங்களாதேஷ், தென்கொரியா, யப்பான் தாய்லாந்து, நேபாளம், சிறிலங்கா, ஆப்கானிஸ்தான், மலேசியா ஆகியவற்றுடன் போட்டியைநடத்தும் இந்தியாவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டியில் பங்கேற்கிறது.முதலிடம் பெறும் அணிக்கு கோப்பையுடன 2 இலட்சம் ரூபா ரொக்கப்பரிசு வழங்கப்படவுள்ளது. 2ஆம் இடம்பெறும் அணிக்கு ரூ.1.25 இலட்சமும் அரையிறுதியை எட்டும் அணிகளுக்கு தலா ரூ.50000 மும் ரொக்கப்பரிசு வழங்கப்படும். மொத்தம் 23ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு ஆட்டத்திலும் நாயகனாக தேர்வு பெறுபவருக்கு ரூ. 5000 பரிசு, போட்டி தொடர் நாயகனுக்கு ரூ.50 ஆயிரம் பரிசு கிடைக்கும். கபடி விளையாட்டை மேம்படுத்துவதும் அதிகமான நாடுகளை இவ்விளையாட்டில் ஊக்கப்படுத்துவதுமே இப்போட்டியின் பிரதான நோக்கம் என அமைப்புக்குழுச் செயலாளர் ஜெயஷெட்டி மும்பையில் வெளியிட்டுள்ளார்.

# நியூசிலாந்துக்கு எதிரான 2 வது டெஸ்ட் சிறிலங்கா அணியில் முரளிதரன்



நியூசிலாந்துடனான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விளையாடுவார் என சிறிலங்கா கிரிக்கெட் வாரியத் தலைவர் மொகான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரும் டிசம்பரில் நியூசிலாந்துடன் அந்நாட்டில் 5 ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் சிறிலங்காஅணி விளையாடவுள்ளது.

இந்நிலையில் வெலிங்டனில் ஜனவரி 22முதல் 26 ஆம் திகதிவரை நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முரளிதரன் விளையாடுவார் என டி சில்வா தெரிவித்துள்ளார்.

தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக கடந்த ஒகஸ்ட் முதல் முரளிதரன் விளையாடாமல் இருந்துவருகிறார்.

காயத்தின் தன்மைகுறித்து நவம்பரில் முரளி மருத்துவரிடம் மீண்டும் ஆலோசனை நடத்தவுள்ள தாக அவர் தெரிவித்தார்.

**விண்ணப்பிக்க வேண்டுகோள்**

தமிழீழ தேசிய மாவீரர் நாளினை முன்னிட்டு வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறையினால் மாவீரர்நாள் வெற்றிக் கிண்ணம் 2004 விளையாட்டு விழா வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள் என இரு பிரிவாக விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளது. போட்டிகளில் கலந்துகொள்கின்ற அணிகள் தங்களது விபரங்களை விளையாட்டுத்துறை, கச்சேரி, வவுனியா என்ற முகவரிக்கு 5.11.2004 முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி; ஆண்கள் பிரிவில் உக்ரேன் முதலிடத்தில்

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் 36 ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி இறுதிக்கட்டத்தை எட்டி யுள்ளது.

ஆடவர் பிரிவில் உக்ரைன் பட்டம் வெல்வது ஏறக்குறைய உறுதியாகியுள்ள நிலையில் வியாழக்கிழமை நடைபெற்ற 13ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய ஆடவர் குழு 2.5- 1.5 என்ற கணக்கில் போலந்தைத் தோற்கடித்து முன்னேற்றம் கண்டுள்ளது.

இவ் வெற்றியையடுத்து, மொத்தம் 31.5 புள்ளிகளுடன் 5-ஆவது இடத்தில் உள்ளது இந்தியா. கியூபாவும் இதே அளவிலான புள்ளிகளுடன் உள்ளது.

இந்தியா, தனது கடைசி மற்றும் 14 ஆவது சுற்று ஆட்டத்தில் அதிர்ச்சி தரும்படியான வெற்றிபெற வேண்டிய அதேநேரத்தில், இந்தியாவைக் காட்டிலும் புள்ளிப்பட்டியலில் முன்னிலை பெற்றுள்ள ரஷ்யா, ஆர்மேனியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் மோசமான தோல்வியைப் பெற வேண்டும். அப்போதுதான் பதக்கம் கிட்டும்.

பேச்சுக்கு வேண்டுமானால் இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் நடைமுறைக்கு இது சாத்தியமா? என்பது 14-வது சுற்றின் முடிவில் தெரிந்துவிடும்

வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில்,முதல் போட்டியில் ஆனந்துடன் விளையாடிய போலந்து வீரர் மசீஜா,அவருக்கு நிகராக சிறிது நேரம் ஆடினார். ஆனால் பலத்த அனுபவம் வாய்ந்த ஆனந்த் 39-வது நகர்த்தலில் அவரைப் பணியச் செய்தார்.


# தென்னாபிரிக்க அணியிலிருந்து கிப்ஸ், பௌச்சர் நீக்கம்


கிப்ஸ்

இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்க அணியில் இருந்து ஆரம்பதுடுப்பாட்டவீரர் கிப்ஸ், விக்கெட்காப்பாளர் மார்க் பௌச்சர் ஆகியோர் நீக்கப் பட்டுள்ளனர்.

இந்திய சுற்றுலாவுக்கான தென்னாபிரிக்க அணியில் சுறுப்பின வீரர்கள் நால்வர் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர். அணித் தலைவராக ஸ்மித்தும், துணைத்தலைவராக நிக்கியோயேயும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நிக்கியோயே ,கிப்ஸ் ஆகியோர் போட்டி நிர்ணய சதியில் ஈடுபட்டதாக டில்லி பொலிசாரால் விசாரணைக்கு அழைக்கப் பட்டிருந்த நிலையில் இந்தியாவுக்கான சுற்றுலாவில் இடம் பெறுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத்தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகின்றேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 31-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## குறுக்கு வழியும், விளைவும் !

"அரசாங்கம் குறுக்கு வழியில் அரசியலமைப்பை திருத்தம் செய்ய முயற்சிக்குமானால் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைப்பதைத் தவிர்க்க முடியாது" என்ற எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவின் எச்சரிக்கையானது யதார்த்தத்தின் பாற்பட்டது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் நீடிக்கப்படும் நோக்கில் ஆளும் கட்சியினால் குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் பல்வேறு வழிமுறைகள் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், சனாதிபதி சந்திரிகா மீண்டும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவாய்ப்பை. ஏற்படுத்துதல்.நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை தோற்றிவித்து அதனைப் பொறுப்பேற்றல் போன்ற பல விடயங்கள் ஆலோசிக்கப்படுகின்றன.

இதேவேளை, எத்தகையதொரு அரசியலமைப்பு மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு- தற்போதைய அரசியல் யாப்பின் பிரகாரம் சனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லை. அதாவது அரசியல் யாப்பில் மாற்றம் செய்வதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் அதனிடம் இல்லை.

இந் நிலையில் தான் வேறு ஏதாவது குறுக்கு வழிகளைக் கொண்டு அதாவது கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்துதல், அன்றி பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி புதிய அரசியல் யாப்பை உருவாக்குதல் போன்ற வழிமுறைகளை ஆளும் கட்சி மேற்கொள்வது பற்றி ஆலோசித்து வருகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்காக குறுக்குவழிகயைக் மேற்கொள்ளமாட்டார் என்பதில்லை. கடந்த காலத்தில் தமது அதிகார அபிலாசைகள் காரணமாக பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றை அற்ப ஆயுளில் முடிவிற்குக் கொண்டு வந்தவர். தற்பொழுது சனாதிபதி பதவிக் காலத்தை 2006ஆம் ஆண்டு இறுதி வரை நீடிப்பதற்காக அதிகாரத்தை துஷ பிரயோகம் செய்யும் வகையில் செயற்பட எத்தணிப்பவர்.

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகா தற்பொழுது கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தே எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குறுக்கு வழிகளில் ஆட்சி அதிகாரத்தை நீடிக்க விளைவாரேயானால் அது நிச்சயமாக சிறிலங்கா அரசியல் யாப்பினையும், ஆட்சி மன்றத்தையும் (பாராளுமன்றம்) புறந்தள்ளியதான நடவடிக்கையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் பின்னர் சிறிலங்காவின் சட்டவாட்சி என்பது அர்த்தமற்றதொன்றாகி விடும்.

அதாவது ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தமது தேவைக்கும், விருப்பிற்கும் ஏற்ற வகையில் அரசியல் யாப்பை மாற்றிக் கொள்ளவும் ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவும் இது வாய்ப்பை உருவாக்குவதாகிவிடும். அத்தோடு அரசியல் யாப்பு விதிகள் எதற்கும் ஆட்சியாளாகள் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டிய அவசியம் இருக்கப்போவதில்லை.

இதேவேளை சிறிலங்கா அரசியல்வாதிகள் தமது அதிகார அபிலாசைகளுக்காக அரசியல் யாப்பிற்கு மாறாகச்செயற்படவோ அன்றி மாற்றி அமைக்கவோ முற்படுகையில் தமிழ் மக்களும் தங்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் பேணுவதற்குமான அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவது என்பது தவிர்க்க முடியாததாகிவடும்.

ஒரு புறத்தில் ஆட்சியாளர்களினால் சட்டவாச்சி சீர்குலைக்கப்படுகையில் ஒரு பகுதி மக்கள் தமக்கென ஒரு சட்டவாட்சியை உருவாக்குவதும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதும் தவறாக மாட்டாது. இது அவசியமானதும் கூட அத்தோடு தமது அதிகார அபிலாசைகளுக்காக அரசியல் யாப்பைக் குறுக்கு வழியில் சிதைக்கவும், சட்டவாட்சிகளைச் சீர்குலைக்கவும் தயாரான அரசியல் வாதிகளினால் தமிழ் மக்கள் தமக்கென அரசொன்றை அமைப்பதையோ அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதையோ கேள்விக்குள்ளாக்கும். தார்மீகப் பொறுப்பும் அவர்களுக்குக் கிடையாது.

இந்த வகையில், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள எச்சரிக்கையானது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்றே அதுமட்டுமல்ல ஆட்சியாளர்களின் இத்தகைய முடிவானது தற்போதைய யுத்தநிறுத்தத்திற்கும் சமாதான முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாகிவிடும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆட்சி அதிகாரத்தில் நிலைத்திருக்க மேற்கொள்ளும் நடவடிக்கையானது சட்டவாட்சியைச் சீர்குலைவிற்கு உள்ளாக்கும் நிலையில் உடன்பாடுகளும் அர்த்த மற்றுப் போவது தவிர்க்க முடியாததாகும். அத்தோடு நாட்டை யுத்தத்தை நோக்கித் தள்ளுவதாகவுமே இருக்கும்.

# சமாதானப் பேச்சுவார்த்தையை துரிதமாக ஆரம்பிக்கவேண்டுமாம்

### அகாகூஷியிடம் சந்திரிகா தெரிவிப்பு

சமாதான பேச்சுவார்த்தைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க தெரிவித்துள்ளார்.

யப்பானிய அரசாங்கத்தின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாஷியுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை சனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற வேளையே சனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக யசூசி அகாஷிக்கு விடயங்களை தெளிவுபடுத்தியதாக சனாதிபதிச் செயலகம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளை துரிதமாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டதுடன் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் யப்பானிய அரசாங்கம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் சனாதிபதி சந்திரிகா நன்றி தெரிவித்துள்ளார்.

# ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டவர் இலங்கையர் என்பது ஊர்ஜிதமாகியது

ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்தரக் சாரதியான தினேஸ்தர்மேந்திரா ராஜரட்ணம் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் ஹெந்தளை வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். மூன்று ஆண் பிள்ளைகளின் தந்தையான இவர் தொழிலின் நிமித்தமாக 2003ஆம் ஆண்டு யூன்மாதம் குவைத் சென்றுள்ளார்.

பண வசதியற்ற இவர்70 ஆயிரம் ரூபா கடன் பெற்று குவைத்திற்கு சாரதியாக பணி புரிந்ததாகவும், பின்னர் குவைத்தில் இருந்து எவ்வாறு ஈராக்கிற்கு சென்றாா. என்பது தங்களுக்குத் தெரியாதெனவும் அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் குவைத்திற்குச் சென்று ஒரு வருடமாகியும் போதிய சம்பளம் கொடுக்கவில்லையென்றும் அதனையடுத்து சம்பளம் தனக்கு போதாதென்று கடிதத்தில் எழுதியிருந்ததாகவும் கடந்த மாத மளவில ஈராக்கிற்கு வாகனம் ஓட்டுவதாக கூறி கடிதம் எழுதியிருந்ததாகவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார். இதனையடுத்து தினேஸ் தர்மேந்திராவின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்வதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக லெபனானிற்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். தீவிரவாதிகளின் கோரிக்கைகள் என்னவென்று இன்னமும் தெரிவிக்கப் படவில்லை யென்று குறிப்பிட்ட அவர் நிதி தொடர்பான கோரிக்கையா?அல்லது அரசியல் தொடர்பான கோரிக்கையா? என் பது தொடர்பாக இன்னமும் அறிவிக்கப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கத்தை விமர்சிக்கும் கூட்டமைப்பு பா.உகள் மீது நடவடிக்கை

### சனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

அரசாங்கத்தை விமர்சிப்பதும் மற்றும் கட்சி கூட்டு ஒப்பந்தங்களை மீறி செயலபடுபவர்களுக்கும் அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் சகலருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக சிறிலங்கா சனாதிபதி அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக கட்சிப் பொதுச் செயலாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச அமைச்சர் பீ.டி லாக்காந்த ஸ்.கே சுபசிங்க ஆகியோர் சமீபத்தில் ஆற்றிய உரைகளுக்குப் பின் இத் தீர்மானங்கள் அமைச்சர் குழுவில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின் சனாதிபதி இத் தீர்மானத்தை வெளியிட்டுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளில் சனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்களும், சனாதிபதி சட்டத்தரணியும் கலந்து கொண்டனர். அடுத்த வாரம் இந்திய விஜத்தின் பின் நாடு திரும்பியதும் இது சம்பந்தமாக நடவடிக்கைகளை சனாதிபதி மேற்கொள்வார் என சனாதிபதி செயலகம் அறிக்கை விட்டுள்ளது

# உரிய நேரத்தில் சனாதிபதித் தேர்தல் நடத்தாவிடின் தீவிர போராட்டம்

### ஐ.தே.கட்சி அறிவிப்பு

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு டிசம்பர் மாதத்திற்கும் இடையில் உரிய நேரத்தில் நாட்டில் சனாதிபதித் தேர்தலை நடத்தாவிட்டால் நாட்டில் உள்ள சகல இன மக்களையும் இணைத்துக் கொண்டு சனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக களுத்துறை மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் மங்கள சமரவீர 2006 ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் அதற்கு முன்னதாக எக்காரணம் கொண்டும் தேர்தல் நடத்தப்படமாட்டாது என அமைச்சர் மங்கள சமரவீர கூறிய கருத்துக்களுக்கு பின்பே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இது சனநாய விரோத செயலாக கருதப்பட்டுள்ளதென்று டாக்கடர் ராஜித சேனாரத்ன மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

### வெளிநாடு செல்வோரிடம் அறிக்கை கோரல்

வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து விட்டு நாட்டுக்கு திரும்பிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு நடைபெற்றுள்ள சம்பவங்களைப் பற்றிய பூரண அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். சில அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியதால் எந்த பலனும் அரசுக்கு ஏற்படவில்லை எனவும் ஆகவே ஒவ்வொரு அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கடந்த வாரம் அமைச்சர் கூட்டத்தில் நடந்த கலந்துரையாடலின் பொழுது சனாதிபதி தெரிவித்துள்ளார்.

### -பொலிசாரின் வாக்கிடோக்கியைப் பறித்து-

# பொலிஸ் நிலையங்களுக்கு கட்டளை பிறப்பித்தவர் கைது

பொலிசார் ஒருவரின் வாக்கிடோக்கியைப் பறித்த ஒருவர் அதன் மூலம் பொலிஸ் நிலையங்களுக்கு கட்டளைப் பிறப்பித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றித் தெரிய வருவதாவது:-

கடந்த 28ஆம் திகதி நீர் கொழும்பில் உள்ள ஒரு ஹோட்டலில் திருமணம வைபவம் ஒன்று நடந்துள்ளது. இந்த திருமண வைபவத்தில் மதுபோதையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதால் நீர் கொழும்பு ரோந்து கண்காணிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிசார் ஒருவர் கைகலப்பைத் தடுப்பதற்கு வந்தபொழுது அவரின் வாக்கிடோக்கியை மது போதையில் நின்ற ஒருவர் பறித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டார். பின்னர் தான் ஒரு பிரதி பொலிஸ் அதிபராக நடித்து நீர் கொழும்பு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கட்டளை பிறப்பித்துள்ளார். கடும் முயற்சிக்கு பின் வாக்கிடோக் கியையும் அதனைப் பறித்தவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

# குற்றச்செயல்களுடன் பொலிசாருக்கு தொடர்பிருப்பதாக அறிந்துள்ளேன்!

## - பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

நாட்டில் நிகழும் குற்றச் செயல்களோடு பொலிசாருக்கு தொடர்புகள் இருப்பதாகத் தனக்கு தெரிய வந்துள்ளது என பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள் சிலரும் தற்போது கடமை புரியும் பொலிஸ் அதிகாரிகளில் சிலரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவது குறித்து பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவித்துள்ளதாகவும் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.இதேவேளை வீதிச் சோதனை சாவடிகளில் கடமையில் உள்ள பொலிசார் பொலிஸ் சீருடையில் உள்ளவர்களை சோதனையிட வேண்டும் என்றும் அவர்களிடம் உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள், ஆள் அடையாள அட்டைகளை பரிசோதிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை பொது இடங்களிலும், வீடுகளிலும் சோதனையிட முயலும் பொலிசாரிடம் பொதுமக்கள் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கோரவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (32)

# க.பொ.த.(சா/த) பரீட்சை டிச.13ம்திகதி ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை நடைபெறும் என கல்வி ஆணையாளர் மகிந்த விஜயசிறி கூறி உள்ளார். இம்முறை தனியார் பரீட்சார்த்திகள் ஐந்து லட்சம் பேர் தோற்றி உள்ளனர். என்றும். தனியார் பரீட்சார்த்திகளிடமிருந்து பெருமநிதி கிடைத்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தத் திட்டம் தயாரிப்பு

## – பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் தயாரித்து வருகின்றதென்று பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக் குடியரசு சுகாதார சேவைகள் சங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்குச் சிறந்த சம்பள உயர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இந்தச் சம்பள உயர்வின் கீழ் ஏற்படக்கூடிய சம்பள முரண்பாடுகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை சிபார்சு செய்யுமாறு திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள ஆணைக்குழுவிடம் கூறப்பட்டுள்ளதென்றும் பிரதம மந்திரி தெரிவித்தார். ஊழியர்கள் அவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றியபின்னரே உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை விடுக்க வேண்டுமெனவும் பிரதம மந்திரி கூறியதுடன், இதனை மனதிற்கொள்ள வேண்டுமென்றும் அவர் சுகாதாரத் துறையிலுள்ள தொழிற் சங்கங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ஜே.வி.பி...

டிக்கை மேற்கொள்ள சனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் சுசில் பிரேம்ஜயந்த தற்போது நாட்டில் இல்லை என்பதால் அவருடைய கருத்துக்களை அறிய முடியவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஒப்பந்தத்தை சனாதிபதி மீறுவதாக தெரிவிக்கப்பட்டு வரும் குற்றசாட்டு குறித்து கருத்து வெளியிட்டுளள சனாதிபதி ஜே.வி.பியினருக்கு தெரியப்படுத்தாமல் எந்த ஒரு நடவடிகையினையும் அரசாங்கம் மேற்கொள்வில்லை என்றும் மக்கள் மத்தியில் தம்மை நியாயப்படுத்த ஜே.வி.பி மேற்கொள்ளும் ஒரு முயற்சியே இது என்றும் விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது. (32)

### உறுப்பி...

பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ.மஜீத், திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோர் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர். ஏற்கனவே அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தி சனாதிபதி மீது அதிருப்தி வெளியிட்டுள்ளது. இதன் காரணமாகவே இம்மூவரும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரில் ஏற்கனவே ஹூசைன் பைலா ஆளும் கட்சிக்கு தாவி பிரதி அமைச்சரானார். இப்போது இந்த மூவரும் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு முன் வந்ததையடுத்து, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 5ஆகக் குறைகின்றது.

# எட்டு அமெரிக்கப் படையினர் தீவிரவாதிகளுடனான மோதலில் ப...

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் எட்டு அமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் ஒன்பது கடற்படையினர் காயமடைந்திருப்பதாகவும் கூறப்பட்டதுடன் அங்கே வேறு சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதாகக் கூறப்படவில்லை. இந்தத் தாக்குதலை
தவிர்ப்பதற்கான இறுதி முய
யாக முன்னர் பலூஜா நகரின் ப
நிதி ஒருவருடன் பேச்சு நடத்
யிருப்பதாக ஈராக் நிர்வாகம்
யிருந்தது. ஆனால் இந்தப் பே
கள் மூலமாக நல்ல சமிஞ்சை
எதுவும் வருவது தென்படவில்
என்று பலூஜாவில் உள்ள
முஸ்லிம் மதகுருமார் கூறியிரு
தாக பாக்தாத்துக்கான பி.
செய்தியாளர் கூறியிருக்கின்ற

# தொலைக்காட்சி அலுவலகத்தி... பாரிய குண்டுவெடிப்பு

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள அல்-அராபியா வெளிநா
தொலைக்காட்சி அலுவலகங்களுக்கிடையே கார்க்குண்டு வெடித்த
7 பேர் கொல்லப்பட்டும் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி அதே கட்டடவளாகத்தில் இருக்கும் மற்
தொலைக்காட்சி நிறுவனமான எம்பி.சி சனலின் செய்தியாளர் கூறுகை
மன்சூர் பகுதியில் உள்ள இந்த கட்டடத்தின் அல்-அராபியா ஊழிய
வேலை நிமிர்த்தமான கூட்டமொன்றினை நடத்திக் கொண்டிருந்த போ
இந்தக் குண்டு வெடித்ததாகவும் இதன் போது அக்கட்டத்தின் மு
மாடி இடிந்து ஊழியர்கள் மேல் விழுந்து விட்டதென்றும் அதன் பின்
அந்த இடத்தில் தீ கொழுந்து விட்டு எரிந்ததாகவும் அச்செய்தி
மேலும் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரச ஊழியர் தொழிற்சங்... 3 ஆம் திகதி போராட்டம்

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன. கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. அரசாங்கம் தாம் உறுதியளித்தபடி அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும். இந்த ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர் சம்பத் அரசாங்கம்
அரசாங்க ஊழியர்களுக்
யிரம் ரூபா வரை சம்பள
வழங்கப்படவேண்டும் எ
வித்துள்ளார். அரசாங்க ஊ
ளுக்கு சம்பள உயர்வு வழ
வேண்டும் என்ற கோரிக்
மத்தியில் தனியார் துறை ஊ
களுக்கும் சம்பள உயர்வு வ
பட வேண்டும் என்ற நோக்க
முன்வைத்து அன்றைய
தனியார் ஊழியர்களும்
ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்
ளதாக அவர் தெரிவித்தார்.

# யாழ்.மனித உரிமை அதிகாரி மீது தாக்குத... விரைவில் சர்வதேச ம.உ.ஆணைக்குழு ஆர...

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பினது அதிகாரிகள் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதர உள்ளனர்.

இவ்வாறு வருகைதரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்
பின் அதிகாரிகள் மனித உ
கள் ஆணைக்குழு அதிகா
பொலிசாரால் தாக்கப்பட்
குறித்து சம்பந்தப்பட்ட பெ
மற்றும் மனித உரிமைகள் ஆ
குழுவின் அதிகாரிகள் மீது
ணைகளை மேற்கொள்வர்.
வினால் மேற்கொள்ள
விசாரணை அறிக்கை இ
அரசிடம் கையளிக்கப்படும்
தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்...

வீழ்ந்துள்ளார்.

பின்னர் அயலவர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தார். (14)

### மக்கள்...

அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தனா, 23-2ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேர்ணல் லக்சிறீ அமர துங்க, விசேட அதிரடிப் படை பொலிஸ் அதிபர் வசந்த ரத்னா யக்கா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதி வாகர உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் குறிப் பாக சோதனைச் சாவடிகளில் பொதுமக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கெடுபிடிகள், இருதரப்பு பிரதேசங்களிலும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு இடமளித்தல், அண்மைக் காலங்களில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவங் கள் போன்றன குறித்து ஆராயப்பட்டுள்ளன.

இச்சந்திப்பு தொடர்பாக படைத்தரப்பில் பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தனா வழமை போல் எத்தகைய கருத்துக்களையும் கூற மறுத்து விட்டார்.

விடுதலைப் புலிகளின் மட்டு அம்பறை அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் கருத்து தெரிவிக்கையில், படையினரின் சோதனைச் சாவடிகளிலும், வீதிச் சோதனைகளிலும் மக்கள் எதிர் நோக்கும் கெடுபிடிகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இனிமேல் அத்தகைய கெடுபிடிகள் இடம்பெற மாட்டாது என்று படைத்தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாது விட்டால் இத்தகைய சந்திப்புகள் பற்றி யோசிக்க வேண்டி வரும் என்பதை படைத்தரப்பின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம் என்று தெரிவித்தார். ஆட்கொலைகளை பொறுத்த வரை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எத்தகைய வன்முறைச் சம்பவங்களும் இல்லை. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இடம்பெற்று வரும் இத்தகைய ஆட்கொலைகள் குறித்து தகுந்த முறையில் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது அரசாங்கப் படையினரின் பொறுப்பாகும்.

இதற்கு எமது ஒத்துழைப்பு தேவைப்பட்டால் வழங்கப்படும் என்பதையும் இச்சந்திப்பில் சுட்டிக் காட்டியுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். அடுத்த சந்திப்பு எதிர்வரும் 20ஆம் திகதி இடம் பெறும்.

### இல...

யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட இச் சந்திப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையக ஆணையாளர் செல்வகுமார் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி ருவான் சந்திரசேகர ஆகிய அதிகாரிகளும், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரின் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு விளக்கமளித்த யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ் குடாநாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காக கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாரே மனித உரிமைகளை மீறி சட்டத்தையும், ஒழுங்கையும் சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள பொலிஸாரிடமிருந்து பொது மக்கள் தமது பிரச்சினைகளை முறையிட்டு நியாயமான தீர்வுகளை பெற முடியாதுள்ளனர். இதற்கு மொழிப்பிரச்சினை பெரும் தடையாக உள்ளது. இதை விட யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயம், மற்றும் கெடுபிடிகளால் மக்களின் வாழ்வுரிமை பாதிக்கப்பட்டிருப்பதாகவும அவர் சுட்டிக்காட்டினார். (33.27)

### உருத்திரபுரம்...

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக கடந்த மூன்று தினங்களாக தீவிரமாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் பூநகரிப்பகுதியில்
வைத்துகைது செய்யப்
மேலதிக விசாரணைகள்
கொள்ளப்பட்டு வருவதா
அவர் மேலும் தெரிவித்தா
(த

### முன்னாள்...

விடுதலைப் புலிகளுக்கும்
கடத்தல் சம்பவத்திற்கும்
விதமான தொடர்பும் இ
என்பதை மிகவும் தெளி
எடுத்து கூறியதாகவும் தெரிவி
கடந்த செவ்வாய்கிழமை வ
பண்டாரிக்குளம் பகுதியில் இ
புளொட் இயக்கத்தின் முன்
உறுப்பினர்கள் இனம் தெ
தவர்களினால் கடத்தப்பட்டதா
ஒரு நபர் தப்பித்து வந்து த
விடுதலை புலிகள் இயக்க
சந்தேகம் இருப்பதாகத் தெரி
தாகவும் போர் நிறுத்தக் க
ணிப்புக் குழுவினர் தெரிவி
ளனர். எனினும் இவ்வாறான
சம்பவம் இடம் பெற்றதை
ஊடகங்கள் மூலமே அ
கொண்டதாகவும் அவ்வாறு
தமது அரசியல் துறையாலே
அல்லது இயக்கத்தாலோ
செய்யப்படவில்லை என்
வவுனியா மாவட்ட அரசியல்த்
பொறுப்பாளர் மேலும் தெ
ததாக கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.